NOOLAHAM FOUNDATION

# பள்ளிக்கூடம்

# 9 ஆவது ஆண்டு விழா மலர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOOLAHAM
FOUNDATION

# நூலகம் நிறுவனம்

## ஆண்டு மலர் 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்குனரின் இதயத்திலிருந்து...

'தேசமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!'

என்ற பாட்டுத் தலைவன் பாரதியின் கூற்றுக்கிணங்கத் தமிழுக்கான தனித்துவத்தைப் பேணவும் இலங்கையின் தமிழ் பேசும் சமூகத்தின் தனித்துவத்தைப் பேணவும் எமது நூலகம் நிறுவனம் ஆவணப்படுத்தல், எண்ணிமப்படுத்தல் சார்ந்த செயற்பாடுகளில் வெற்றிகரமாக ஈடுபட்டு அதன் ஒன்பது ஆண்டு நிறைவை சிறப்பு விழாவாகக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி.

இறவாத. புகழுடைய எம்மண்ணின் பல தமிழ் நூல்களுக்கு என்றும் அழியா எண்ணிம வடிவுரு அளித்து அவை உலக மக்கள் அனைவரையும் சென்றடையும் வகையில் எண்ணிம நூலகத்தில் பதிவேற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் நூலகம் நிறுவனம் இன்று 2,223 எழுத்தாளர்களின் 13,000 இற்கும் மேற்பட்ட ஆவணங்களை எண்ணிமப்படுத்தியுள்ளது என்பதனை மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மங்காத வனப்புடைய சங்கத்தமிழை காலங்கள் கடந்தாலும் வழக்கிழக்கச் செய்யாது வனப்புடன் வாழ வைக்கவும் எமது பாரம்பரிய கலை கலாசாரங்களை ஆவணப்படுத்தவும் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களுடைய 'இராவணேசன்' வடமோடி நாடகத்தினையும், அவுஸ்திரேலியா நிருதக்ஷேத்ரா நாட்டிய பள்ளியின் புலம்பெயர் இலங்கைத் தமிழ் மாணவிகளால் அரங்கேற்றப்படவுள்ள பரதநாட்டிய நிகழ்வினையும் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் அழகுற அரங்கேற்றுகின்றது. அத்தோடு 'ஆவணமாநாட்டு ஆய்வுக்கட்டுரைக் கோவை' நூல் வெளியீடும் பள்ளிக்கூடம் இணையத்தள அங்குரார்ப்பணமும் இவ்விழாவில் சிறப்புற இடம்பெறவுள்ளது.

'எமது சமூகத்தை ஆவணப்படுத்தல்' என்ற எமது இலக்கு நோக்கிய பயணம் தொடர்ந்தும் பலரது பங்களிப்போடு வீறுநடை போட்டு செல்லும் என்பது கண்கூடு. இவ்வொன்பதாவது ஆண்டு நிறைவில் நானும் ஒரு பங்காளராக இணைந்து செயற்படுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**சி. சேரன்**
இயக்குனர்
நூலகம் நிறுவனம், இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பத் வங்கியின் சுப்பர் கிளை வெள்ளவத்தையில்

வங்கித்துறையின் புதியதோர் புரட்சி,
365 நாட்களுக்கான வங்கிச்சேவை!

சம்பத் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் உங்களுக்கு:

- காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நீடிக்கப்பட்ட வங்கிச் சேவை.
- அர்ப்பணிப்புடன் சேவை வழங்கும் தொடர்பாடல் முகாமையாளர்கள் மற்றும் சினேகபூர்வமான ஊழியர்கள்.
- பலதரப்பட்ட சேமிப்புக் கணக்குகள்.
- நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி.
- தனிநபர் மற்றும் வர்த்தக தேவைகளுக்கேற்ப நடப்பு கணக்குகள்.
- சிறந்த வட்டியுடன் வீட்டு கடன்கள்.
- வியாபாரக் கடன் மற்றும் குத்தகை வசதிகள்.
- உங்கள் வசதிக்காக எலக்ட்ரோனிக் வங்கி சேவைகள்.

நவீன வங்கி உலகின் அதிகபட்ச சலுகைகளுடன்
எமது சேவையின் உச்ச கட்ட பலன்களை அனுபவித்திடுங்கள்.

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Asia Art Archive



I would like to express my appreciation for the incredible work that Noolaham Foundation has been undertaking. Noolaham's digitisation efforts to safeguard endangered documents of the Sri Lankan Tamil speaking communities and its dedication to enhance open access to these digitised documents through its free Internet library is an immense contribution toward recovering one of the many histories of the world under threat of erasure.

As a point of convergence for critical thinking and dialogue among both organisations and individuals, Asia Art Archive (AAA) crossed paths with the Noolaham Foundation on the occasion of 'Open Edit: Mobile Library – From AAA to Raking Leaves' in 2013. On behalf of AAA, I would like to take this chance to thank Sivananthamoorthy Seran, Director of Noolaham Foundation, for giving an insightful presentation during 'Open Talk' – one of the programmes co-presented by AAA and Raking Leaves in Sri Lanka during 'Open Edit' – in which he shared the different approaches Noolaham has taken to build its archive.

On the occasion of the 9th annual celebration of Noolaham Foundation, I wish the Foundation every success in its future endeavors and encourage the broader public to take advantage of its rich resources to learn more about the Tamil speaking communities of Sri Lanka.

***Linda Lee***
Library Coordinator
Asia Art Archive



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் வாழ்த்துச்செய்தி



தமிழர்களின் வரலாற்றை, ஆவணப்படுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் தங்களுடைய பணி உலக நாடெங்கும் உள்ள அனைத்து தமிழர்களுக்கும் பயன்படும் வகையில் உள்ளது. பள்ளி நூலகங்கள், கல்லூரி நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் என பலவகையான நூலகங்கள் இருந்த பொழுதும் காலத்திற்கேற்ப மின்னணு நூலகத்தை உருவாக்கியுள்ளார்கள்.

"எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கிறது" என்ற பிளாட்டோவின் பொன்மொழிகளை உண்மையாக்கும் வகையில் ஒவ்வொரு வீட்டிலும் மின்னணு நூலகத்தை வீட்டிற்கே கொண்டுவந்து சேர்க்கும் தங்களுடைய நூலகப்பணி மேலும் மேலும் வளர்ச்சியடைய ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***G. Sundar***
Director
Roja Muthiah Research Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Wishes

## From

## A. Shivakumar

**7/3, Arethusa lane,**
**Colombo - 06.**
**Tel : 071 66 04 251**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Neelan Tiruchelvam Trust

Neelan Tiruchelvam Trust (NTT) is pleased to send this message to Noolaham Foundation for its annual magazine 2013.

NTT, an indigenous philanthropic organisation that supports work on social justice, peace and reconciliation, is happy to have been able to support Noolaham Foundation in its efforts to preserve old and new literature in electronic format for a wide audience. The availability of a free internet site, where people anywhere can read materials in Tamil on a wide range of subjects, is to be lauded. Our contribution, provided as part of our programme to support arts and media initiatives to promote peace and pluralism, has enabled the Foundation to add over 260 books (more than 81,000 pages) for a global readership.

Noolaham Foundation through its work is providing a noteworthy service to the Tamil speaking communities and to those interested in maintaining the Tamil language and literature, and we wish that it will continue successfully in the future as well as an important source of information for different interest groups.

***Jacqueline Netto***
Executive Director
Neelan Tiruchelvam Trust



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNITY COMPUTERS

Computer Sales, Repairs, Services & Maintenance Net Working & All kind of Computer Accessories

# UNITY PC SYSTEMS

**Colombo :**
No. 394, 1/1, Galle Road,
Colombo 06.
Tel : 0112 - 361 777
Mobile : 0777 - 890 532
E-mail : unitypc@sltnet.lk

**Jaffna :**
No. 74, Palali Road,
Illupaiyadi Junction,
Jaffna.
Tel : 021 222 0 666
Mobile : 077 344 6 194
E-mail : unitypcja@sltnet.lk

*Best Wishes*

From

# S. Varnam

## PHYSICS TEACHER

17C, 32ND LANE, WELLAWATTE.
Tel : 0777 49 23 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய எம் சங்கத்தமிழைப் பேணிப் பாதுகாக்க முன்னின்று உழைத்து வரும் நூலகம் நிறுவனம் தனது இச்சேவையில் அகவை ஒன்பதைக் கடந்து வீறு நடை போடுவதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அகவை ஒன்பதையொட்டி வெளியிடும் இவ்வாண்டு மலரில் எனக்கும் செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு உளமார்ந்த பாராட்டுடன் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"ஈழத்துத் தமிழ்ச்சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்" எனும் தொனிப்பொருளில் இலங்கையில் ஆவணப்படுத்தலையும் எண்ணிமப்படுத்தலையும் செவ்வனே செய்து வருகின்ற இந்நிறுவனம் எமது பாரம்பரிய கலாசாரத் தனித்துவத்தை மட்டுமல்லாது இலங்கைவாழ் தமிழ்பேசும் சமூகத்தினரது மரபணுச் செல்வங்களையும் பேணிப் பாதுகாப்பதில் அளப்பரிய சேவை ஆற்றி வருகின்றது.

இவர்களின் சேவை எதிர்வரும் காலங்களிலும் சிறப்புற அமைய வேண்டி வாழ்த்துவதோடு, இச்சேவை உலகளாவி விரிந்துள்ள தமிழர் இதயங்களிலும் உளங்களிலும் நிறைந்து எதிர்கால சந்ததியினருக்குக்கான அழியாத சொத்தாக நிலைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்**
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்.



NOOLAHAM FOUNDATION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் எனது பார்வையில்



நூலகம் நிறுவனம் எடுத்திருக்கும் பணியும், முயற்சியும் பல கோணங்களில் ஒரு அறிவுபூர்வமான சேவையை நமது சமூகத்திற்கு தருவதற்கு முன்வந்திருக்கிறது. இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம். இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து இதை முன்னெடுப்பதும் எம் காலத்தின் தேவையான ஒரு முயற்சி. ஒரு சமூகத்திற்கு விழிப்புணர்ச்சியை ஊட்டி நூல்களைப் பற்றியும், இதழ்களைப் பற்றியும் செய்திகளைப் பரப்புவதும், பகிர்ந்துக்கொள்வதும் இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள். இதன் பெரும் பெறுபேறுகளில் ஒன்றாக ஆய்வறிவுள்ளோர் ஒன்று கூடலும் அறிவைப் பகிர்ந்துக்கொள்ளலும் நிகழும் போது அது ஒரு ஆக்கபூர்வமான முயற்சியாக சமூகங்களை ஒன்றிணைக்கும் பாலமாக தோற்றம் பெறும். ஆய்வறிவாளர், மாணவர் சமூகம், வரலாற்றறிஞர்கள் போன்றோரை ஒன்றிணைப்பதுடன் அவர்களது ஆழ்ந்த அறிவைப் பெருக்குவிக்கும் ஒரு சாதனமாக இது திகழ்வதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம், உணர்ந்துள்ளோம் அதையிட்டு பெரும் மகிழ்ச்சியும் கொண்டோம். ஆவணங்களை என்றும் அழியா வண்ணம் பாதுகாக்கப்படுவது நம் காலத்தின் ஒரு முக்கிய தேவை என்பதை நாம் கடந்து வந்த வரலாறு எமக்கு உணர்த்தியுள்ளது. பொதுவாக தமிழ் நூலகங்கள் தமிழியலை மட்டுமே தமிழர்களுக்குச் சார்பான ஒரு துறையாகக் கொண்டிருந்தது. அக்கருத்தை மீறி பல்துறை கற்கைநெறிகளையும் ஒன்றடக்கி அதன் பல்வேறு நூல்களைப் பாதுகாக்கவும், பகிரவும் நூலகம் எடுத்த குறிக்கோள் அதி முக்கியமான ஒரு விடயம் என்பது எனது கருத்து.

இவர்களுடைய ஆக்கபூர்வமான நிகழ்வுகளைத் தொடர்புபடுத்தி அவர்கள் நடாத்திய வேறு பல விடயங்களையும் நாம் இணைத்துக்கொள்ளும் போது ஒரு பூரண பயன்பாட்டு நிலையையும் நாம் அவற்றினூடாக இனங்காணலாம். இவர்களது செய்திமடல், ஆண்டு இதழ் வெளியீடு, இவர்கள் நடாத்திய கருத்தரங்குகள் போன்றன இவர்களது வளர்ச்சியின் குறியீடாக இருக்கும் அதே நேரம் இந்நிறுவனத்தின் தீர்க்கதரிசனத்தையும் எம்முன் கொண்டுவருகிறது.

**கலாநிதி செல்வி திருச்சந்திரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம் நிறுவனம் – அறிமுகம்

இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்களின் மரபறிவுச்செல்வங்களை ஆவணப்படுத்தல் பேணிப்பாதுகாத்தல் மூலமாக, தற்போதைய, எதிர்கால தலைமுறையினருக்கான அறிவுப் பகிர்வுப் பணியை செவ்வனே செய்து வருகின்ற நூலகம் நிறுவனம், இலங்கையின் அறிவுச்சேகரங்கள் சார் அபிவிருத்தி ஊக்குவிப்பையும், மேம்படுத்தப்பட்ட தகவல் வளப் பயன்பாட்டையும் ஊக்குவிக்கும் நோக்குடன் நிறுவப்பட்டது.

அத்துடன், இணையத்தில் ஓர் எண்ணிம நூலகத்தைப் பேணல், தகவல் வளங்களைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சிகளுக்கு உதவுதல், எண்ணிமப்படுத்தல் சார்ந்த ஆரம்ப முயற்சிகளுக்குத் தொழில்நுட்ப உதவிகள் வழங்கல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரசாரங்களில் பங்குபற்றல் போன்ற நடவடிக்கைகளையும் இது மேற்கொண்டு வருகின்றது. எமது நிறுவனமானது ஆவணப்படுத்தல் சார்ந்த இலக்கையே தமது நிறுவனத்தினதும் நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்ற பல நிறுவனங்களான ஆசிய ஓவியக் காப்பகம் (Asia Art Archive), ரோஜா முத்தையா ஆராய்ச்சி நிலையம் (Roja Muthaiya Research Institute), பாண்டிச்சேரி பிரெஞ்சு நிலையம் (French Institute of Pondicherry), ரேகிங் லீவ்ஸ் (Raking Leaves) போன்ற நிறுவனங்களுடனும் மற்றும் கல்வி அபிவிருத்தித் திட்டங்களினூடாக இளைஞர்களுக்கும் சமூகத்துக்கும் சேவை ஆற்றி வருகின்ற சர்வதேச, இலாப நோக்கற்ற நிறுவனமான (Vision Global Empowerment) நிறுவனத்துடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலகம் நிறுவன தன்னார்வலர்கள், நூலகம் நிறுவனத்தின் இலக்கை அடையும் பொருட்டு இலங்கையிலும் கடல் கடந்தும் நிறுவன செயற்பாடுகளில் ஈடுபட்டும் தாம் வசிக்கும் நாடுகளில் அதனை நிறுவியும் பெரும் சேவை ஆற்றி வருகிறார்கள்.




நூலகம் நிறுவன வலைத்தளத்தின் முகப்பு


232 தன்னார்வலர்கள், 252 நிதிப் பங்களிப்பாளர்கள், 16 கூட்டு நிறுவனங்கள், 356 உள்ளடக்க பங்களிப்பாளர்களுடன் 7 நாடுகளில் (கனடா, இங்கிலாந்து, நோர்வே, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, சுவிட்ஸர்லாந்து) கிளைகளுடனும் நூலகம் நிறுவனம் இயங்கி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணிம நூலகம்


ஆசியாவின் மிகப்பெரும் அறிவுக்களஞ்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பொது நூலகம் புராதன சிறப்பை இழந்து மூன்று தசாப்தங்களைக் கடந்து விட்டது. இந்த நூலகம் மீளவும் நிர்மாணிக்கப்பட்டு அண்மைய வருடங்களில் இயங்கி வந்தாலும் இன்னமும் முன்னர் நிலைபெற்றிருந்த நூலகத்தில் இருந்த அரிய பல ஆவணங்கள், நூல்கள், ஏட்டுச் சுவடிகளின் மூலப் பிரதிகள் இல்லாது அந்த அரிய பல அறிவுச் சொத்துக்கள் இனிமேல் கிட்டாத நிலை தான் இருக்கப்போகின்றது. இது ஒருபுறமிருக்க கடந்த காலங்களில் எத்தனையோ பல எழுத்தாளர்களின் அச்சு வாகனமேறிய நூல்களின் எஞ்சிய பிரதிகள் கூட, தாம் சந்தித்த இடப்பெயர்வுகளின் போது தொலைந்தும் அழிந்தும் போயின. அச்சுக்கு வராத பல பிரதிகளின் எழுத்து வடிவங்களுக்கும் இதே நிலைதான். இலங்கைத் தமிழ் மக்கள், தம் வாழ்வை ஆவணப்படுத்தும் எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சியிலும் ஈடுபடுவதில்லை என்பது இன்று நேற்றல்ல நீண்டகாலமாகவே பலராலும் முன்வைக்கப்படும் ஓர் பாரிய குற்றச்சாட்டு.




## 109 ஆண்டுகளில் வெளிவந்த 12,956 ஈழத்து எழுத்தாவணங்கள்

**Noolaham Digital Library**

No. of Documents by Category




Documents added each year




இத்தகைய கையறு நிலைகளுக்கு மத்தியிலே ஈழத்து எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி (Digitisation), ஆவணப்படுத்தி (Documentation) உலகளாவிய ரீதியில் அனைவரிடமும் இணையத்தினூடே கொண்டுசேர்க்கும் ஓர் பெரும் பணியை நூலக நிறுவனம் தனது எண்ணிம நூலகத் திட்டத்தின் மூலம் ஆற்றி வருகின்றது. நிறுவனத்தின் இலவச எண்ணிம நூலகமானது ஆக்கபூர்வ சமூக விழுமியங்களை அடையும் நோக்குடன் அறிவையும் சமூகத் தொடர்பாடல்களையும் இணைக்கும் ஒரு கற்றல் நிலையமாக செயற்பட்டு வருகின்றது. இது பல்வேறு நிறுவனங்களின் அறிவுக்களஞ்சியமாக விளங்குவதோடு ஆசிரியர், மாணவர், ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர், மக்கள் ஆகியோரின் தகவல் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றது. இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தகவல் வளங்களையும் அறிவுச்சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்து இலங்கைத் தமிழ் பேசும் சமூகத்துக்குப் பாரிய பங்காற்றி வருகின்றது. நூலகம் நிறுவனமானது அச்சிடப்பட்ட ஆவணங்களுடன் அச்சிடப்படா கையால் எழுதப்பட்ட ஆவணங்களையும் எண்ணிமமாக்கி வருகின்றது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் இவ்வெண்ணிம நூலகத் திட்டம் இலாப நோக்கற்ற தன்னார்வ முயற்சியாக உலகெங்குமிருக்கும் தமிழ் பேசும் தன்னார்வத் தொண்டர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எண்ணிம நூலகம் வலைத்தளத்தின் முகப்பு

நூலக நிறுவனத்தின் எண்ணிம நூலக வலைத்தளமான www.noolaham.org ஆனது ஆய்வாளர்கள் முதல் மாணவர்கள் வரை பல்வேறு தரப்பினராலும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஓர் உசாத்துணை இணையத்தளமாக மாறியுள்ளது. இதுவரை மொத்தம் 12,956 ஈழத்து எழுத்தாவணங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் நூற்றியொன்பது ஆண்டுகளில் வெளியானவையாகும். 1,629 பதிப்பாளர்களினூடாக 2,223 ஆசிரியர்கள் வெளியிட்ட நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நூலக வலைத்தளத்தில் முஸ்லிம் ஆவணகம், தலித் ஆவணகம், மலையக ஆவணகம், பெண்கள் ஆவணகம் ஆகிய நான்கு சிறப்புச் சேகரங்களும் பதினொரு வலைவாசல்களும் உருவாக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இப்பணியை அவதானித்து வருபவர்கள் அண்மைக்காலத்தில் நூல்களை எண்ணிமப்படுத்தும் பணி, மிகுந்த ஆர்முடுக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்படுவதைக் காணலாம். எமது நூலக நிறுவனம் ஆவணப்படுத்தல் என்ற வட்டத்திற்குள் மாத்திரம் மட்டுப்படாமல் அதைத் தாண்டியும் ஆக்கபூர்வமான பல்வேறு செயற்றிட்டங்களிலும், தொழில்நுட்பங்களிலும், நிகழ்வுகளிலும் முனைந்து நின்று பணியாற்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

From

UDAYAA
Jewellers

303, Galle Road, Colombo – 06.

Tel : +94 11 2554933

SPECTRUM
Human Capital Development

UNIVERSITY OF MYSORE

Out Reach Campus in Sri Lanka

University of Mysore

Our Courses:

- ✓ Biotechnology, Biochemistry & Microbiology
- ✓ Chemistry, Botany & Food Science
- ✓ Chemistry, Geology & Resource Management
- ✓ Math, Statistics & Computer Science
- ✓ Math, Statistics & Physics
- ✓ Psychology, Sociology & Criminology
- ✓ English Literature, Journalism & Political Science

**Globally recognized Commonwealth University * India's first 5-star accredited university * A+ ranking *One of India's oldest universities.*

**All three years in Sri Lanka !!!!**

ENROLL NOW FOR 2014 ADMISSIONS

..............................................................................................

**SPECTRUM INSTITUTE OF SCIENCE AND TECHNOLOGY**

W: www.spectrumcampus.net T:2554848/ 2504742 E:info@spectrumcampus.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனர் கருத்து

## ஆவணமும் ஆய்வகமும்



பிரதேசத்தின் சகல தரவுகளும் ஆவணமாக்கப்பட வேண்டும். அப்போது தான் அப்பிரதேசத்தின் சாத்திரம் காலத்தின் வாசிப்புக்கு இலகுவாக அமையும். அவ்வழியில் 'நூலகம்' அளிக்கும் பங்கு முக்கியமான தொன்றாகும். சமுதாயம், இனம், மொழி, பிரதேசம், நாடு எனும் அடிப்படையில் உள்ள தரவுகளை ஆவணமாக்கல் என்பது இலகுவான விடயமல்ல. கடின உழைப்பையும் தொடர் செலவையும் கொண்ட ஒரு தொடர் செயல் வடிவம் இந்நூலக வேலை. இப்பணி இன்றைக்கு மட்டுமன்றி எதிர்காலத்திற்கும் பல விடயங்களைச் சொல்லி நிற்கும் என்பது உண்மை

'நூலகம்' பற்றிய செய்திகள் பேசப்பட்டாலும் சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பூரணமாக விளங்கியது. அன்று பலதரப்பட்ட ஆர்வலர்கள் வந்திருந்தனர். இலக்கியப் படைப்பாளிகள் கூடுதலாக வந்திருந்த போதும் தேடலர்களும் ஆய்வாளர்களும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. படைப்புக்கள் படைப்பாளிகள் காலம், பிரதேசம் போன்ற விடயத்தில் ஆர்வம் காட்டிக் கலந்துரையாடினர். நூல்கள் மட்டுமன்றி பத்திரிகைகள், மலர்கள், பிரசுரங்கள் போன்ற பிற விடயங்களையும் நூலகம் கொண்டிருந்தமை வரவேற்புப் பெற்றது.

நூலகத்தின் செயற்பாடு நிகழ்காலம், எதிர்காலம் என இரு காலத்திற்கும் வேண்டப்படுவதொன்று பலவகைக் கால கட்டங்களையும் தாண்டி வந்த இன்றைய சமூகம் தான் வாழ்ந்த காலத்தின் பதிவை வெளிப்படுத்தியவை ஆவணமாக்கப்படுவதை அறிந்திராது போயினும் எதிர்காலம் அறிய நூலகம் வழியமைத்துள்ளது. இன்னும் பல தரவுகள் இலை மறை காயாக உள்ளன. அவை பல காரணங்களால் ஆவணமாக்க முடியாது உள்ளது. பலவகைத் தொடர் சாதனங்கள் மூலம் அறியத்தரின் பயன் கிட்டும் என நம்புகின்றேன்.

இப்பணி சிறக்கப் பிரதேச ரீதியான ஆர்வலர்களை அறிந்து அவர்கள் மூலம் மேலும் விரிவாக்கலாம். தேவை, நோக்கம், பயன் என்பன பற்றிய சிந்தனைத் தெளிவு சமுதாயத்தில் ஏற்படுத்தின் நூலகம் மேலும் வலுவுள்ளதாகும். குறிப்பிட்ட பிரதேச எல்லைகளுக்கு ஒருவரையாவது நிரந்தர சேவையாளராக வைத்திருப்பின் பல தரவுகள் துரிதமாகவும் சரியாகவும் கிடைக்கும். வளரும் 'நூலகம்' காத்திரமானதாக விளங்கும்.


**இ.கணேசராசா**
(வாழ்நாள் மாணவன்)
ஏழாலை மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடம் திட்டம் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம், கல்விகற்பதற்கான விருப்பம் இருந்தும் கல்விக்கான வளங்களையும் வசதிகளையும் பெற்றுகொள்ள' வலுமை குறைந்த மாணவர்களிற்கு இலவசமாக, மிகச் சிறந்த கல்விக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல் ஆகும்.



சமூகங்கள் அறிவு சார்ந்த சமூகமாக மாறுகின்ற போது உயர் கல்விக்கும் சிறப்புத்தேர்ச்சிக் கல்விக்கும் ஓர் அத்தியாவசிய தேவை ஏற்படுகின்றது. ஆனால் அக்கல்வியைப் பெறுவதற்கான செலவீனமோ ராகெட் வேகத்தில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. குறிப்பாக இலங்கையின் வடகிழக்குப்பகுதி மாணவர்களுக்கு நீண்டகால அரசியல் யுத்தம் காரணமாகத் தரமான கல்வி என்பது எட்டாக்கனியாகவே உள்ளது தொழிற்பயிற்சிக் கல்வி, மெய்நிகர் கற்றற் கல்வி முறைமைகள் மூலம் இலாபகரமான தரமான கல்வி வளத்தைப் பெற்றுத் தரக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. பள்ளிக்கூடம் திட்டமானது முறைசார் கல்வியை முறைசாராக் கல்வியுடன் இணைக்கும் மெய்நிகர் கற்றல் தள கல்வி முறைமைகளினூடாக இலங்கையின் தமிழ் பேசும் மாணவர்களுக்கு கல்வி போதிப்பதையும் இக்கல்வி முறைமையினூடாக ஜனநாயக சோசலிச சமூகத்தினைப் பலப்படுத்தும் அணுகுமுறையாக செயற்படுவதையும் நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்றது. இது மெய்நிகர் கற்றல் வளங்களை ஒழுங்கமைத்தல், மெய்நிகர் கற்றல் முகாமைத்துவ ஒழுங்குமுறைகளை ஒருங்கமைத்தல், சமூக ஒழுங்குமுறைகளை இணைத்தல், முறைசார் கல்வியை முறைசாராக் கல்வியுடன் இணைத்தல் ஆகிய நான்கு செயற்கட்டமைப்புகளூடாகத் தனது இலக்கைச் செவ்வனே பூர்த்தி செய்து வருகின்றது.

2012 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இச்செயற்திட்டத்திற்காகவென மிகப்பாரிய எண்ணிம இணைய கல்வி சார் நூலகத்தை தாபித்துள்ளது (www.epallikoodam.org). இதற்காக இலங்கையின் பிரபலமான, மிகச்சிறந்த கல்வி அடைவைப் பெற்ற பாடசாலைகளுடனும், ஊக்கமாக செயற்படும் வலயக் கல்விப்பணிமனைகளுடனும், மாகாணக் கல்வித் திணைக்களங்களினுடனும் ஆக்க பூர்வமான தொடர்பைப் பேணிவருகின்றது. இதன் மூலம் ஆறிலிருந்து பதின்மூன்று வரையிலான தரங்களிற்கான கடந்த கால வினாத்தாள்கள், மாதிரி வினாத்தாள்கள், பாடத்திட்டங்கள், ஆசிரியர் கையேடுகள், பாடப் புத்தகங்கள், உசாத்துணை நூல்கள் போன்றவற்றை தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பள்ளிக்கூடம் வலைத்தளத்திற் பதிவேற்றப்பட்டுள்ளது. இவ்வலைத்தளமானது 'மூடில்'(moodle) தொழில்நுட்பத்தை கொண்டமைந்துள்ளது.

moodle



பள்ளிக்கூடம் இணைப்பாளர் திரு. க. சுரேஷ்குமார் மட்டக்களப்பு கலந்துரையாடலில் உரையாற்றும் போது

பள்ளிக்கூடம் மெய்நிகர் கற்றற் சூழலை நிறுவுவதற்காண ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை உயர்தர மாணவருக்கான எண்ணிம நூலகம், சாதாரணதர மாணவருக்கான எண்ணிம நூலகம் ஆகிய இரு செயற்திட்டங்களினூடாக அக்டோபர் 2012 இல் முன்னெடுத்தது. ஜனவரி 2013 இல் CFCD (Centre for Child Development) ஊழியர்களுக்கு, அவர்களிடத்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நிமிர்த்தம் விழிப்புணர்வு நிகழ்வொன்றை நடாத்தியது. வெளிநாட்டு வளவாளர்களுடன் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கலந்துரையாடல் ஒன்று மார்ச்சு 2013 இல் நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத் திட்டத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் பொருட்டு யாழ் விரிவுரையாளர்கள் ஆசிரியர்களுடன் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. ஜுலை 20, 21 களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 41ஆவது இலக்கிய சந்திப்பிலும் பள்ளிக்கூட செயற் திட்டம் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

பல கல்வித் திட்டங்களினூடாக இளைஞர் களுக்கும் சமூகங்களுக்கும் உதவிடும் அமெரிக்க நிறுவனமான 'Vision Global Empowerment' பள்ளிக்கூடத்துடன் இணைந்தது. இப்பள்ளிக்கூடத்திட்டமானது இதுவரை ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை நேரடியாகச் சென்றடைந்துள்ளது.

மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல்பீட தமிழ் மாணவர்களுடன் இணைந்து, அகில இலங்கை ரீதியாக க.பொ.த உயர் தர உயிரியல் மற்றும் கணித பிரிவுகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களிற்கு முன்னோடிப் பரீட்சை நடாத்தி, அவ்வினாத் தாள்களைத் திருத்தி, அவற்றின் பெறுபேறுகளையும், மாணவர்களது இஸட் வெட்டுப் புள்ளியையும் வெளியிட்டமை பெரும் வரவேற்பைப் பெற்றது.




Mora E-Tamils Model Exam வலைத்தளத்தின் முகப்பு

மேலும் ஊவா வெல்லச பல்கலைக்கழக தமிழ் மாணவர் களுடன் இணைந்து, இலங்கையில் தமிழ்ப் பாடசாலைகளுள்ள பல்வேறு பிரதேசங்களிலும், க.பொ.த சாதாரண தர மாணவர்களிற்கு கருத்தரங்குகளை வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. மேலும் பாடசாலைகளில் கல்விகற்கும் மேலதிக கல்வி உதவி தேவைப்படும் மாணவர்களிற்கு வெவ்வேறு பல்கலைக்கழகங்களிற்கு தெரிவாகியுள்ள புதுமுக மாணவர் படையைத் துணைகொண்டு, ஒருவருக்கொருவர் (peer-to-peer) என்ற ரீதியில் கல்வி கற்க - கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளது. இத்தகைய அளப்பரிய சேவைகளை இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்களுக்கு ஆற்றிவரும் பள்ளிக்கூடம் திட்டமானது எதிர்காலத்திலும் இத்தகைய பல செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Wishes

From

**V.Parameshwaran** B.sc, Dip in Edu

**Chemistry Teacher**

Brilliant Institute
# 136, Sangamita Mawatha,
Colombo – 03.
Tel : 011 234 7728, 247 3792

Noble Academy
#15, 36th Lane,
Colombo – 06.
011 – 491 5649, 250 5816.

---

*Nithya Shree*
*Jewellery*
*The Temple of Gold*



150, Galle Road,
Wellawatte, Colombo- 06.
Sri Lanka.

Tel: +94-11-2554869, 5767170
Fax: +94-11-5767170
E-mail: nithyashreey@yahoo.com

Web site : www.nithyashree.com

---

# Best Wishes

From

**Rtn.A.HARISHAN** Bsc, Msc.

University of Colombo,
University of Peradeniya,
Teacher & online teacher
Combined Mathematics

Edexel, Cambridge
0773690611
173 A, sri Saranankara road,
Kalubowila, Dehiwala.
http://mathswin.webs.com

---

**SARRITA**
*Jewellery*

**AUTHORISED MONEY CHANGER**
**ARR (PVT) LTD.**

**No. 42, Sea Street, Colombo- 11, Sri Lanka.**

Tel : (+) 94 11 2435361
(+) 94 11 2325485
Fax : (+) 94 11 2435298

සරිටා ජුවලරි
சரிட்டா ஜுவலரி

**E-mail : sarrita42@live.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் - என் மனப்பதிவுகள்



நூலகம் தொடர்பான எனது மனப்பதிவுகள் என்ற வகையில் எனக்கும் நூலகத்துக்குமான தொடர்பு நூலக நிறுவனம் 2013 ஏப்ரல் மாதம் 27,28 ஆகிய தினங்களில் நடாத்திய தமிழ் ஆவண மாநாடு 2013 உடன் தான் ஆரம்பமாகிறது. அதில் குறைவான நேரமே பங்குபற்றிய போதும் ஈழத்து தமிழ், இலக்கிய செல்நெறியை வளர்த்தெடுப்பதற்கு இவ் தமிழ் ஆவண மாநாடு மிகுந்த பயன் ஆற்றியதை அறியமுடிந்தது. தமிழின் பல துறைகளையும் ஆவணப்படுத்தும் இம் முயற்சி காலத்தால் மறக்க முடியாதது. அதில் பங்குபற்றிய பல்துறை சார்ந்தவர்களின் ஆய்வு முயற்சிகள் என் போன்ற இலக்கிய ஆர்வலர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் அமைந்தது. ஆனால் ஒரே நேரத்தில் இரு இடங்களில் கருத்துரை நடைபெற்றதன் காரணத்தால் முழுமையான பயன் பெற முடியாமல் போனது கவலைக்குரியதே. எதிர்காலத்தில் இப்படியான தவறுகள் திருத்தப்படவேண்டும். மேலும் தமிழ் ஆவண மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் நூலுரு பெற்றுருந்தால் இந்த ஆய்வு முயற்சிகள் பதிவுகளாகி இருந்திருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் நூலகம் ஆற்றி வரும் பணி கவனிப்புக்குரியது. சகல வெளியீடுகளையும் கணினி மயப்படுத்தி தரவுத்தளத்தில் சேமித்து எதிர்காலச் சந்ததி பயன்பெற உழைப்பது காலத்தால் மறக்கமுடியாதது. ஒரு சஞ்சிகை ஆசிரியர் என்ற வகையில் எமது பணியை நூலகம் எமக்காக ஆற்றி வருவது நன்றிக்குரியது.

**மைகல் கொலின்**
இதழாசிரியர்
'தாகம்', 'மகுடம்' சஞ்சிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THARSHAN
Bestway Grocery Hut STORE®
everything's good here
சிவாநந்தா விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக
தர்ஷன் ஸ்டோர்
தரமான பொருட்கள் நியாயமான விலையில்...
தொடர்புகளுக்கு
புதிய கல்முனை வீதி,
கல்லடி – உப்போடை, மட்டக்களப்பு
077 9696473, 0752696408

ஸ்டூடியோ
போக்கஸ்
துரித புகைப்பட சேவை
5 நிமிடத்தில்
(துளசி திருமண மண்டப கட்டிட தொகுதியில்)
பிள்ளையார் கோவில் வீதி, கல்லடி-உப்போடை.
நீங்கள் விரும்பும் அனைத்து வகையான புகைப்படங்களும் ஐந்தே நிமிடங்களில் வடிவமைத்து கொடுக்கப்படும்.


மேலதிக சேவைகள்
Album Making & Binding (Karizma, Story Book, 3D)
HD Digital Video & Editing
Framing (Duro Card, UV Cool, Stand, Glass)
Laminating (Hot /Cool Laminating)
பழைய படங்களை டிஜிடல் முறையில் புதுப்பித்தல்

தொடர்புகளுக்கு
94 754293960, 9477 6940665
STUDIO FOCUS
focus in your each snap...
உங்களது ஒவ்வொரு புகைப்பட தேவைகளுக்கும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓலைச்சுவடி ஆவணப்படுத்தல்




இலங்கை தமிழ் பேசும் சமூகங்களிற்குச் சொந்தமான மிகவும் பழமையான அறிவுப் பொக்கிஷங்களான ஓலைச்சுவடிகளை ஆவணப்படுத்தும் செயற்பாட்டை 2012 இல் ஆரம்பித்தது. இதற்கான ஆவணப்படுத்தல் தொழில்நுட்பம் சார்ந்த ஆலோசனைகளைப் பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம் வழங்கியிருந்தது.



நிறுவனத்தின் ஓலைச்சுவடிகளை ஆவணப்படுத்தல் செயற்பாடு முதன் முதலாக சுன்னாகம் பொது நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டு அங்கு காணப்பட்ட 10 ஓலைச்சுவடிக் கட்டுகள் எண்ணிமப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் காணப்பட்ட 5 ஓலைச்சுவடிகள் யாழ் பொது நூலகத்தில் வைத்து ஆவணப்படுத்தப்பட்டது. இதன்போது திரு. பாலமுரளி அவர்களால் சேகரிக்கப்பட்ட தொன்மையான நாணயங்கள் மற்றும் முத்திரைகளும் ஆவணப்படுத்தப்பட்டன.

அடுத்தகட்டமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துசமயத்துறை விரிவுரையாளர் திரு. பத்மநாபன் அவர்களது தனிப்பட்ட சேகரிப்பாகக் காணப்படுகின்ற 36 ஓலைச்சுவடிகளையும் சிவகுருநாதர் குருபீடத்தினரால் பாதுகாத்து வரப்படுகின்ற வைத்தியம் சார்ந்த ஓலைச்சுவடிகளையும் ஆவணபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எண்ணிமப்படுத்தப்பட்ட ஓலைசுவடிகளை இணையத்தில் வெளியிடுவதற்கான முயற்சிகளை எமது தன்னார்வ தொழில்நுட்ப அணியினர் மேற்கொண்டு வருகின்றனர்.






பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனத்தில் ஓலைச்சுவடி ஆவணப்படுத்தும் பயிற்சி நெறியில் நூலகம் நிறுவனத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3T* (தமிழ் மொழிக்கான தொழில்நுட்ப கருவிகள்):



NOOLAHAM FOUNDATION

## 3T Laboratory

About

Home
FAQ
News
Contribute
Opportunities
Contact us
Feedback

The Foundation

Management
Community
Technology
Communication
Finance
Programs

Contributors

Teams & Groups
Advisory Board
Benefactors
Volunteers
Organizations
Repositories
Content Contributors

### Technical Tools for Tamil (3T) Laboratory

Home | About | Research | Collaborations | People | News

**Vision**


We see Tamil as one of the mightiest, oldest and still thriving languages in the world. We believe adopting technological advancements is crucial for the longevity and completeness of the Tamil. We aim to lay the groundwork for the technological tools that are essential to make the language available with the up-to-date technology and further preparing the Tamil language for the next generation.

**Objectives**

- Perform fundamental research in the language and technology that is needed develop tools dedicated for the language of Tamil.
- Gather information from present and previous works, analyse and review them. Organise these works into the themes of the 3T Laboratory in order to support the current research, and launch future projects.
- Promote synergy with independent research groups, institutions and universities that engage the research in Tamil linguistic and technology. Offer a common platform for collaboration and information exchange. Provide required resources, help and consultancy for emerging research scholars.
- Establish scientifically validated methodologies and frameworks that help standardising technology related to Tamil language. These standards will be used as ground rules and serve as the basis for future research and application development.
- Delivering urgent language essentials to researchers and communities, e.g. dictionary databases, data corpus, language packs for multi-language applications, etc.

This page was last modified on 14 July 2013, at 18:18.

This page has been accessed 75 times.



**யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறை தலைவர் கலாநிதி E.Y.A. சார்ள்ஸ் அவர்கள் நூலகம் நிறுவனத்தில்**

இந்த யுகம் தொழில்நுட்ப யுகம். சிந்தனைகள் தரவாக மாறிவிட்டபின் அழிவற்ற வடிவம் கொண்டு நிலைபெறுகிறது. நூலக நிறுவனத்தின் ஆரம்பக் காலகட்டத்தில் தட்டெழுதப்பட்ட ஆவணங்கள் மட்டும் இணைக்கப்பட்டன. ஒரு கட்டத்திற்குப் பின்னர் தன் வளர்ச்சிப்படியில் எண்ணிம நூலகம் (Digital Library) என்ற கருத்தியலைத் தாண்டிச் சிந்திக்கத் தொடங்கியது. எண்ணிம நூலகம் என்ற எண்ணக்கரு ஆவணக்காப்பகமாக மாற்றம் பெற்றது. ஆவணங்களை ஆவணங்களாக அதே வடிவத்தில் அப்படியே காட்சிப்படுத்தல், பாதுகாத்தல் என்பன தொடர்பான அக்கறையின் காரணமாக மின்வருடல் (Scan) செய்யும் ஒரு முறையை நோக்கி நூலகம் நிறுவனம் நகர வேண்டி வந்தது. மின்வருடல் முறையின் மூலம் தட்டெழுதுவதை விட கிட்டத்தட்ட முப்பது மடங்கு அதிகமான ஆவணங்களை ஆவணப்படுத்தக் கூடியதாக இருந்தது என்பது முதலாவது முக்கியமான விடயம். இரண்டாவது, நூல்கள் என்ற நிலையைத்தாண்டி சஞ்சிகைகளையும் ஆவணப்படுத்தக்கூடிய நிலைமை மின்வருடல் மூலமே சாத்தியமானது. ஆக, தட்டச்சு செய்வதைவிட மின்வருடல் செய்வதன் மூலம் ஆவணப்படுத்துவது அதிகம் வசதியானதாகக் கருதப்பட்டது. ஆவணப்படுத்தலின் துல்லியம், வேகமாக ஆவணப்படுத்தல் ஆகிய காரணங்களால் ஒரு கட்டத்தில் தட்டச்சு செய்வதன் மூலமான ஆவணப்படுத்தல் முறைமை முற்றாக கைவிடப்பட்டு மின்வருடல் முறைமை ஆதிக்கம் பெற்றது.

* 3T - Technical Tools for Tamil



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்வருடலின் சிறு குறைபாடு யாதெனில், மின்வருடப்பட்ட (Scan) நூல்களிலுள்ள விடயங்களை, உதாரணத்திற்கு கலாநிதி மௌனகுரு அவர்களுடைய 'இராவணேசன்' நூலிலிருந்து "அழிவது உறுதி என்று அறிந்துமே இராவணேசன், இறுதி மூச்சிருக்கு மட்டும் உறுதியை விட்டானில்லை" என்ற பாடல்வரிகள் மாத்திரம் தேவைப்படுமொருவர், அப்பாடலை கணினி மூலம் பிரதியாக்கம் (Copy-Paste) செய்து பயன்படுத்தமுடியாது. அதற்கு அப்பாடலை தனியாக தட்டச்சு செய்தே பயன்படுத்த முடியும். மின்பிரதியாக்கப்படும்போதே அவற்றை எண்ணிம எழுத்துக்களாக (Digital letter) உருமாற்றும் தொழில்நுட்பம் இதுவரை தமிழில் சாத்தியப்படவில்லை.

அதற்காக நூலகம் நிறுவனம் உயர் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி எமது எதிர்கால சந்ததியினர் இணையத்தில் முற்று முழுதாக தமிழ் மொழி மூலம் இயங்கும் வண்ணம் பயனர் தோழமையுடன் கூடிய தொழில்நுட்ப கருவிகளை உருவாக்க

- Natural Language Processing Tools for Tamil (தமிழ் மொழிக்கான இயற்கை மொழி கணினியியல் கருவிகள்)
- Creation of an Open ended Framework for Language Modelling (மொழிப் படிமமாக்கலுக்கான திறந்த முனை உருவரைச் சட்ட உருவாக்கம்)
- Tamil Optical Character Recognition (தமிழ் ஒளியியல் உரு இனங்காணல்)
- Tamil Speech Recognition (தமிழ்ப் பேச்சு இன்ங்காணல்)
- Tamil Speach Synthesis (தமிழ்ப் பேச்சு உருவாக்கல்)
- Translation (மொழிபெயர்ப்பு)
- Text Input Methods for Tamil (தமிழ் மொழிக்கான எழுத்துவடிவ உள்ளீட்டு முறைமைகள்)
- Knowledge Engineering in Tamil (தமிழ் மொழியில் அறிவுப் பொறியியல்)
- Evolution of the Tamil Language (தமிழ் மொழியின் படிமுறை வளர்ச்சி)

போன்ற ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரியுடனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞான பிரிவுடனும் இணைந்து நூலக நிறுவனம், 'Tamil OCR' செயற்றிட்டத்தில் எண்ணிமப்படுத்தல் சார்ந்த தொழில்நுட்ப பங்காளராகியுள்ளது. Google 'Tesseract' தொழில்நுட்பம் ஊடாக தமிழ் OCR பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பரீட்சார்த்த முயற்சி இதுவாகும். இதற்காக மிகவும் பழமை வாய்ந்த ஆயிரம் தமிழ் ஆவணங்கள் நூலகம் நிறுவனத்தால் எண்ணிமப்படுத்தப்பட்டு, இப்பொறிமுறையூடாக பரிசீலிக்கப்படுகிறது. நூலகம் நிறுவனம் உயர் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி எமது எதிர்கால சந்ததியினர் இணையத்தில் முற்று முழுதாக தமிழ் மொழி மூலம் இயங்கும் வண்ணம் பயனர்ந் தோழமையுடன் கூடிய தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்குகிறது. இதுவரை ஐம்பது தொடக்கம் அறுபது சதவிகித வெற்றி பெற்றுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனர் கருத்து

# நூலகம் - புதிய தலைமுறையின் அறிவுப்புலம்



நூலகம் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் ஆண்டிதழுக்கு எனது கருத்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நூலகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே நான் அதனுடன் தொடர்பிலிருக்கின்றேன். சில பத்திரிகைகள், நூல்கள் என்பவற்றை ஆவணப்படுத்துவதற்கு நானும் உதவியாக இருந்திருக்கின்றேன். குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணியின் “செஞ்சக்தி” பத்திரிகை நவசமசமாய கட்சியின்” புதிய சமதர்மம்” பத்திரிகை போன்றவற்றை நானே கொடுத்து உதவியிருக்கின்றேன்.

நூலகத்தின் இயக்குனர்களான சசீவன், சேரன் ஆகியோர் என்னுடன் தொடர்பிலிருந்தனர். கனடாவில் உயர்கல்வி பயிலும் எனது மகள் தமிழினிக்கும் நூலக நிறுவனத்திற்கும் நீண்டகாலமாகவே தொடர்பு இருக்கின்றது. நூலகம் நிறுவனத்தைச் சேர்ந்த சசீவனும், சேரனும் எனது இல்லத்திற்கு வந்து ஆவணப்படுத்துவதற்கான நூல்களை சேகரித்தனர். ஆனால் அன்றைய வசதியீனம் கருதி அவர்கள் அவற்றைக்கொண்டு செல்லவில்லை. எதிர் காலத்தில் ஆவணப்படுத்தலுக்கு என்னால் சேகரிக்கப்பட்ட நூல்களை நான் கையளிப்பேன்.

ஆவணக்காப்பகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பது எனது நீண்ட கால கனவாக இருந்தது. அதற்கான சில முயற்சிகளில் நானும் ஈடுபட்டிருந்தேன். குறிப்பாக பத்திரிகைகளில் வருகின்ற முக்கிய செய்திகள், கட்டுரைகளை ஆவணப்படுத்தி வைத்திருந்தேன். எனினும் ஒரு நிறுவனம் ஆற்றவேண்டிய பெரும் பணியை தனிப்பட்ட என்னால் தொடந்து ஆற்றமுடியவில்லை. தற்போது நூலகம் நிறுவனம் அந்த முயற்சிகளில் ஈடுபடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மரபையும் கைவிடக் கூடாது, புதியமாற்றங்களையும் புறக்கணிக்கக்கூடாது என்பதில் நாம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். இரண்டிற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்தக் கூடிய பொறிமுறையினையும் நாம் கண்டு பிடிக்கவேண்டும். வரலாறு சமூகவியல் ஆய்வாளர்களுக்கு சிறந்த நூலகம். அதேவேளை சிறந்த ஆய்வுகூடம். இந்த இரண்டு பணிகளையும் ஆற்றுவதில் நூலக நிறுவனம் பெரும் பங்காற்றும் என நான் நம்புகின்றேன்.

பல்வேறு அரிய நூல்கள் சஞ்சிகைகள் பல நூலகங்களிலும் தனிப்பட்டவர்களிடமும் தேங்கிக்கிடக்கின்றன. அவற்றை வாங்கிப்பெற்று ஆவணப்படுத்த நூலகம் நிறுவனம் முயற்சிக்கவேண்டும். பல்வேறு சமூக நிறுவனங்களின் வரலாறுகளையும் பல்வேறு கவிஞர்கள், கலைஞர்கள், புலமையாளர்கள், சமூகசேவையாளர்கள், அரசியல் தலைவர்கள் என்போரது வரலாறுகளையும் ஆவணப்படுத்தவேண்டும் குறிப்பாக தமிழ் அரசியல் தலைவர்களின் பாராளுமன்ற உரைகள், அத்தலைவர்கள் மேற்கொண்ட ஒப்பந்தங்கள், அரசியற் கட்சிகளின் மாநாட்டுத் தீர்மானங்கள் போன்றவற்றையும் ஆவணப்படுத்த நாம் தவறக்கூடாது.

எதிர்காலத்தில் எழுத்து வடிவிலான படைப்புகளை ஆவணப்படுத்துவதற்கு அப்பால் காட்சி வடிவிலான படைப்புகளையும் ஆவணப்படுத்த முயற்சிப்பது பயனுடையதாக இருக்கும். குறிப்பாக புகைப்படங்கள் ஒளிநாடாக்கள், ஒலிநாடாக்கள் போன்றவற்றையும் ஆவணப்படுத்துவது நல்லது. புதிய தலைமுறை தமது அறிவுப்புலத்தினை விசாலப்படுத்த இவை நன்கு உதவும்.

**சி.அ.யோதிலிங்கம்**
பத்திரிகை ஆசிரியர்
'இது நம் தேசம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் ஆவணகம்



முஸ்லிம் ஆவணகம் (Muslim Archive) என்பது நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு சிறப்புச் சேகரச் செயற்றிட்டம் ஆகும். முஸ்லிம் ஆவணகத்திற்கான திட்டம் 2008 இல் உருவானது. (அப்போது அது முஸ்லிம் பிரதிகள் செயற்றிட்டம் எனக் குறிப்பிடப்பட்டது)

அச்செயற்றிட்டம் தொடர்பாக நேத்ரா தொலைக்காட்சியில் 2008.12.20 அன்று நூலகம் நிறுவனம் சார்பாக க.சசீவன் நேர்காணல் ஒன்றினை வழங்கியிருந்தார். அந்த நேர்காணலில் முஸ்லிம் ஆவணங்களைச் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டியதன் தேவையினைச் சுட்டிக் காட்டியதோடு எமது சமூகங்கள் ஆவணப்படுத்தலின் தேவையை, கட்டாயத்தினை உணராதிருப்பதனையும் சசீவன் சுட்டிக் காட்டியிருந்தார். மூன்று கட்டங்களாக முஸ்லிம் எழுத்தாவணங்களின் ஆவணப்படுத்தல் நிகழவேண்டும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.




நூலகம் இயக்குனர் க. சசீவன் இத்திட்டம் பற்றி கலந்துரையாடும் போது

1. ஆவணங்கள் தொடர்பான ஆய்வு, தேடலை மேற்கொண்டு அவற்றை அடையாளங் காணுதல்.
2. ஆவணங்களை கொண்டிருப்போரைத் தொடர்பு கொண்டு அவற்றினைப் பெற்றுக் கொள்ளுதல்.
3. மின்பிரதியாக்கம் செய்து மின்னூல்களாக இணையத்தில் வெளியிடுதல்.

2008 இல் திட்டம் அறிவிக்கப்பட்டபோதும் அதனைச் செயற்படுத்துவதற்கான ஆளணி தொடர்புகள், நிதி ஆகியவற்றினை ஒருங்கிணைப்பது சாத்தியமாக இருக்கவில்லை. 2011 செப்டெம்பர் மாதத்திலேயே எமது எண்ணிம நூலக வலைத்தளத்தில் முஸ்லிம் ஆவணகத்துக்கான ஒரு பகுதி ஆரம்பிக்கப்பட்டது.

இச்செயற்றிட்டம் அக்கரைப்பற்றிலிருந்து இணைப்பாளர் லறீப்தீன் ரஜீப் இனால் செயற்படுத்தப்பட மஹ்ரூஃப் பௌஸர் மற்றும் எம்.ஐ.எம். ஜபீர் இனால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. தொடர்ந்தும் முஸ்லிம் ஆவணகம் நூலக நிறுவனத்தின் இணைய எண்ணிம நூலக வலைத்தளத்தினூடாக (www.noolaham.org) செயற்படுத்தப்படுகிறது. இதுவரை எழுத்தாவணங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. அவை நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் என நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. மீள்பார்வை, அல் ஜசீரா ஆகிய 20 பத்திரிகைகளின் சில பிரதிகளும் பெருவெளி, முஸ்லிம், முஸ்லிம் மித்திரன் போன்ற 22 சஞ்சிகைகளும் 68 நூல்களும் 61 பிரசுரங்களும் எண்ணிம நூலகத்தில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.



சம்மாந்துறையிலிருந்து நூல்களை எண்ணிமப்படுத்தி எமக்கு உதவும் திரு. லறீப்டீன் ரஜீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக ஆவணகம்

மலையக ஆவணகத்தை விருத்தி செய்யுமுகமாக செயற்பாட்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது. இச்செயற்பாட்டுக் குழுவினருடன் மலையகம் சார்ந்த ஆவணங்களை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதுபற்றி ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், மின்வருடல் தொடர்பான தொழில்நுட்ப விளக்கங்களும் எமது நிறுவன ஊழியர்களால் இக்குழுவில் பங்கேற்ற மலையகப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்டது.



அதன் பிரகாரம் 25 மலையக நூல்களை எண்ணிமப்படுத்த ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுத்ததோடு அவற்றில் 6 நூல்களை எண்ணிமப் படுத்தி எமது எண்ணிம நூலகத்துடன் பகிரவும் செய்தார்கள். இதுவரை 38 நூல்களும் 02 பிரசுரங்களும் 66 சஞ்சிகைகளுமாக மொத்தம் 106 மலையக வெளியீடுகள் எண்ணிம நூலகத்தில் ஏற்றப்பட்டுள்ளன.

மிக விரைவில் ஆவணப்படுத்தல் சார்ந்து மக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல்களும் மலையக ஆவணபடுத்தல் திட்டமும் மலையகத்தில் கண்டி, ஹட்டன், பதுளை நகரங்களில் எதிர்வரும் தை மாதம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



மலையக ஆவணக செயற்பாட்டுக் குழு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனர் கருத்து

### நூலகம் - எனது பார்வையில்



Noolaham Foundation என்ற அமைப்பினால் 27.04.2013, 28.04.2013 திகதிகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபம், வினோதன் மண்டபங்களில் நடாத்தப்பட்ட 'தமிழ் ஆவண மாநாடு - 2013' இல் பங்குபற்றும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். அறிவும் புலமையும் சார்ந்த பேராசிரியர்கள் தலைமையின் கீழ் கல்வியாளர்களினால் அரங்குகளுடே, பல்வேறுபட்ட துறைகளிலும் ஆவணப்படுத்தலின் முக்கியத்துவமும் அதனாலான பயன்களும் ஆய்வு செய்யப்பட்டு சிறப்பாக அரங்கேறின. நாட்டின் பலபகுதிகளிலிருந்து வருகை தந்திருந்த ஆர்வலர்களின் ஊக்கம் குறிப்பிடத்தக்கதாய் அமைந்திருந்தது. ஆர்வலர்கள் கைகளில் கிடைக்கப்பெற்ற மாநாட்டு முன்மொழிவுக் கோவை மிகவும் பயன் தருவதான ஆவணமாகும். நூலகம் உத்தியோகத்தர்களின் குறிப்பிடத்தக்க செயலாற்றுகைகள், பராமரிப்புகள் அனைத்து அரங்குகள் பங்கேற்பாளரிடத்திலும் திருப்திகரமாகக் காணப்பட்டது. அரங்குகள் நேரசூசிகைக்கமைய சௌகரியமான சூழ்நிலையில் ஆர்வலர்களின் கவனத்தை முழுமையாக ஈர்த்திருந்தன.

இன்றைய யுகத்தில் மனிதனுக்கான அடிப்படைத் தேவைகளுள், தகவல் வழங்கலிலும், தகவல் பெருக்கத்திலும் தொழில்நுட்பம் எவ்வளவு தூரம் மனிதனுக்குப் பயன்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பளித்திருந்தது. ஆரம்பமறியாத் தமிழ் மொழியினதும், அதனைப் பேசிய மாந்தர் சார்ந்த பல்வேறு தொன்மையான தகவல்களையும் அவை எவ்வாறு மரபுவழி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதும் ஆர்வலர்களிடையே அறியத்தரப்பட்டன. இம்மாநாட்டில் அரங்குகளினூடே முன்வைக்கப்பட்ட அனைத்துத் தலைப்புகளும் எமது வாழ்வியல் மொழி, சமய, கலைப்பண்பாடு சார்ந்தவையாய் அமைந்து, மிகவும் உயர்ந்ததொரு விழுமியத்தை எம்மிடையே ஏற்படுத்திய சிறந்ததொரு இரண்டு நாள் மாநாடாக அமைந்திருந்தது வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் அனைத்துமே ஆவணப்படுத்துதலின் முக்கியத்துவத்தை மட்டுமல்லாது, பல அறியப்படாத விடயங்களிலும் தகவல்களிலும் பாரிய விழுமியத்தை ஏற்படுத்தின என்பதில் ஐயமில்லை. ஒரே நேரத்தில் (Simulaneously) இரண்டு மண்டபங்களில் சிறந்த பயன்தரும் அரங்குகள் அரங்கேறி இருந்தனவானாலும், எவ்வரங்கில் பங்கேற்பது என்ற சிரமமானதொரு தெரிவு ஆர்வலர்கள் கையில் விடப்பட்டிருந்தது.

**திருமதி. இராஜினி தேவராஜன்**
மூத்த எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாபனங்களை ஆவணப்படுத்தல்

பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், சமயத்தலங்கள், சமய அமைப்புக்கள், அரங்குகள், நூலகங்கள், மன்றங்கள், கழகங்கள் முதலிய சகல தாபனங்களும் நூலகம் நிறுவனத்தின் தாபனங்களை ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தப்படுகின்றது.

### - பாடசாலைகளை ஆவணப்படுத்தல்

இலங்கைத் தமிழ் பேசும் சமூகத்தின் தாபனங்களை ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக பாடசாலைகளை ஆவணப்படுத்தும் பணியை நூலகம் தொடங்கியுள்ளது. இலங்கை தமிழ் பேசும் சமுகங்களின் கல்விரீதியான உயர்ச்சியில் பாடசாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. 98% இற்கும் மேற்பட்டவர்கள் ஆகக் குறைந்தது பாடசாலை கல்வியை மேற்கொண்டுள்ளனர். இவர்களது பாடசாலை காலங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதோடு இவர்களின் ஆளுமையிலும் நடத்தை கோலத்திலும் செல்வாக்கு செலுத்தி நிற்கின்றன. பாடசாலை காலங்களிலேயே பெரும்பான்மையானவர்களின் எழுத்தாற்றல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. பாடசாலை தொடர்பான சஞ்சிகைகள், ஆவணங்களில் ஏதாவது சிறிய பங்களிப்பாவது பதியப்பட்டிருக்கின்றதோடு கழகங்கள், விளையாட்டு, கல்வி போன்ற செயற்பாட்டுகள் தொடர்பான இவர்களின் விடயங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட எண்ணிக்கையான பிரதிகள் பதிப்பிக்கப்பட்டு காலவோட்டத்தில் அருகிவரும் இவ்வாக்கங்களை எண்ணிமப்படுத்திப் பாதுகாப்பதன் மூலம் என்றும் மனதினில் இருந்து மறையாத பாடசாலை காலங்களை அசைபோட முடிவதுடன் துறைசார் எழுத்தாளர்களின் ஆரம்பகால எழுத்து செயற்பாடுகளை ஆராயக்கூடியதாகவும் அமையும். இதன் பிரகாரம் பாடசாலைப் பிரசுரங்களை எண்ணிமப்படுத்தும் திட்டத்தின்படி இதுவரை கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்பிரிவு மற்றும் யாழ்.இந்துக்கல்லூரி வெளியிட்ட கணிசமான ஆவணங்களை எண்ணிமப்படுத்தியுள்ளது.

### வேத்தியர் தமிழாவணம் வெளியீடு

**1964 முதல் 2012 வரை வெளியிடப்பட்ட 93 வெளியீடுகளை நூலகம் நிறுவனம் இத்திட்டம் மூலம் எண்ணிமப்படுத்தியுள்ளது. அவ்வாறே இவ்வெளியீடுகளின் தொகுப்பான "வேத்தியர் தமிழாவணம்" எனும் இறுவட்டையும்** Royal College Union Skill Centre **இல் 2013 மார்ச் அன்று நடைபெற்ற இறுவட்டு வெளியீட்டு வைபவத்தில்நூலகம் நிறுவனத்தாருடன் இணைந்து வெளியிட்டு வைத்தது.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக்கல்லூரியின் ஆரம் வெளியீடு

நூலகம் நிறுவனம் யாழ்.இந்துக் கல்லூரியினால் வெளியிடப்பட்ட வெளியீடுகளை எண்ணிமப்படுத்தியுள்ளது. இதில் 1933 இல் வெளிவந்த 'By Laws of the Jaffna Hindu College 1933' என்ற தலைப்பில் அமைந்த வெளியீடு முதல் 2013 இல் வெளியான 'யாழ். இந்துக்கல்லூரி சிவஞான வைரவர் கோயில் குடமுழுக்கு விழா மலர்' வரை 135 வெளியீடுகள் உள்ளடங்கியுள்ளன. அத்துடன் வெளியீடுகள் அனைத்தையும் 'ஆரம்' என்ற பெயரில் இறுவட்டாக தயாரித்து அதனுடன் 'ஆரம் – இந்துவின் ஆவணக் களஞ்சியம்' என்ற தலைப்பில் இறுவட்டின் உள்ளடக்க கைநூல் ஒன்றும் இணைப்பாக வெளியிட்டு வைக்கப்பட்டது.






இவ்விரு செயற்பாடுகளும் பழைய மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் சமூக ஆர்வலர்களின் ஆக்கபூர்வமான விமர்சனத்தையும் பெற்றுக்கொடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்தில் இணைந்து விரைவில் தமது எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்த பல பாடசாலைகள் ஆர்வத்துடன் முன் வந்திருக்கின்றன. முதற்கட்டமாக 20 பாடசாலைகளின் ஒப்புதல் பெறப்பட்டு முழுவீச்சில் எண்ணிமப்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ் பேசும் சமூகங்கள் சந்தித்த இயற்கை அனர்த்தங்கள், போர், இடப்பெயர்வுகள் காரணமாக சில பாடசாலைகள் தமது ஆவணங்களைத் தொலைத்துவிட்டன. இவற்றின் ஆவணங்களை சேகரிப்பதில் பெருத்த இடர்பாட்டை எதிர்கொள்கின்ற போதிலும் இத் திட்டத்தின் மூலம் தேடிப்பெற்ற பெரும் ஆவணப் பொக்கிஷத்தை பாடசாலை சமூகத்திற்கு மீட்டுத்தரும் அளப்பரிய கைங்கரியமும் நடைபெற்றுக் கொண்டிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் - ஓர் அறிவியல் பூங்கா



"வீட்டுக்கு வெளிச்சம் தருவது சாளரம். புத்தகங்கள் இல்லாத வீடு, சாளரங்கள் இல்லாத சத்திரம் போன்றது." நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம் என்றால் அது மிகையல்ல. நல்ல புத்தகங்களைப் வாசிப்பதால் அறிவு வளரும், உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும், எண்ணங்கள் நேர் பெறும், நமது ஆற்றல் பெருகும், திறமைகள் மிளிரும், உற்சாகம் ஊற்றெடுக்கும், சோர்வு அகலும், மனம் நிறைவுபெறும், முடிவுகள் எடுக்க புத்தகம் துணைபுரியும்! வாழ்க்கை மேம்படும்! முன்னேற வழி துலங்கும்! இவ்வாறு புத்தகம் பற்றி நிறையவே பேசலாம்.

நூலக பயன்பாட்டில் எனது சிறிய அனுபவம் ஒன்றைப் பகிரலாம் என நினைக்கின்றேன். எமது நாட்டுப் பேராசிரியர்கள் பலர் பல புத்தகங்களைத் தங்களது துறைசார்ந்து சேகரித்து வைத்திருக்கின்றனர். அவ்வாறு சேகரித்து வைத்திருக்கும் பேராசிரியர்கள் தங்களிடம் பல புத்தகங்கள் இருப்பதால் தம்துறைசார்ந்தும் பிற துறைகள் சார்ந்தும் பல விடயங்களை அறிந்து வைத்திருப்பர். அவ்வாறு தனக்கென பெரிய நூலகம் ஒன்றை நிறுவி வைத்திருக்கும் பேராசிரியரிடம் நான் ஒருதடவை "எனது நூலகத்திலும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை சேர்த்து வைத்திருக்கிறேன் சேர்" என கூறியதும் அதிர்ந்துபோனார். "அதெப்படி, உன்னுடைய நூலகம் எங்கிருக்கிறது" என கேட்டார். "அதுதான் சேர் noolaham.org" எனக் கூறினேன். "அப்படியா இதை ஏன் இவர்கள் செய்கிறார்கள்" என ஒரு காழ்ப்புணர்வை வெளிப்படுத்தினார். இந்தக்காழ்ப்புணர்வு ஒரு சில புத்தகசாலைகளுக்குமுண்டு. இவ்வகையான ஓர் மனப்பாங்கு எமது சமூகத்தினருக்கு இருக்கிறது என நினைக்கும் போது கவலையாக இருக்கிறது. ஆயினும் ஒளிபரப்பி நிற்கும் சூரியனைக் கைகள் கொண்டு மறைக்கத்தான் முடியமா?

எமது நாட்டுப் பெரும்பாலான பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இச்செயற்பாடு அதாவது நூலகத்தின் பயன்பாடுபற்றி தெரிந்திருப்பதாக எனக்குப்படவில்லை. பிள்ளைகள் பாடசாலைகளில் நூலகத்தைப் பார்வையிட அதிகளவில் அனுமதிக்கப்படுவார்களாயின் மிகச்சிறப்புடையதாயிருக்கும். இதற்கான ஏற்பாடுகளை தாங்கள் பாடசாலைகளில் செயற்படுத்துவது ஏற்புடையதாகவிருக்கும்.

தங்களது இணைய நூலகம் எனக்கு ஓர் அறிவியல் பூங்கா. அதில் நான் எப்பொழுதும் உலாவிக்கொண்டே இருப்பேன்.

**எஸ். இந்திரகுமார்**
இதழாசிரியர் - 'அகவிழி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆவண மாநாடு – 2013




இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களின் மரபறிவுச் செல்வங்களை ஆவணப்படுத்தல் பேணிப்பாதுகாத்தல் மூலமாக, தற்போதைய, எதிர்கால தலைமுறையினருக்கான அறிவுப்பகிர்வுப் பணியை செவ்வனே செய்து வருகின்ற 'நூலகம் நிறுவனம்', 2013ஆம் ஆண்டில் தனது எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தனது ஆண்டு விழாவுடன் கூடியதாக 'தமிழ் ஆவண மாநாடு 2013' ஐ நடாத்தியது. 'ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற, இம்மாநாடு கடந்த 2013 ஏப்ரல் மாதம் 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இலங்கையில் ஆவணப்படுத்தல் தொடர்பாக நடைபெற்ற முதல் மாநாடு என்ற வகையில், இது தனித்துவம் பெறுகிறது. இம்மாநாட்டில் நடாத்தப்பெற்ற எட்டு அரங்குகளும் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்திலும், வினோதன் மண்டபத்திலும் இடம்பெற்றன.

அரங்குகள் ஓர் கண்ணோட்டம்

1. ஆவணப்படுத்தலும் தொழில்நுட்பமும் – அரங்கு

தலைமை : பேராசிரியர் வ. மகேஸ்வரன்



இவ்வரங்கில் தமிழ் சூழலில் ஓவியங்களை ஆவணப்படுத்தல், மனித சமூக வரலாற்றை புகைப்படக்கலை மூலம் பாதுகாத்தல், ஈழத்து சித்த மருத்துவ ஏட்டுச்சுவடிகளை பாது காத்தல், அழிவாபத்தில் உள்ள ஆவணங்களைப் பாதுகாப்பதில் எண்ணிமப்படுத்தலின் முக்கியத்துவம் மற்றும் பண்டையகால ஓலை மற்றும் காகித ஆவணங் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன.

2. வரலாறு, தொல்லியல், மரபுரிமை – அரங்கு

தலைமை : பேராசிரியர் சி.பத்மநாதன்



இவ்வரங்கில் இலங்கைத் தமிழர் மரபுவழிக் கட்டிடச் சூழல்களும் அவற்றை ஆவணப்படுத்தலும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள் கால பண்பாட்டுச் செல்வாக்கு : ஒரு வரலாற்றுப்பார்வை, மட்டக்களப்பு தேசத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டுக்களும், கல்வெட்டாய்வின் இன்றையபோக்கும், வெல்லாவெளி கிராமத்தின் வரலாறும் தொல்லியல் எச்சங்களை ஆவணப்படுத்தலும் மற்றும் மட்டக்களப்பு பழுகாமத்துச் சாசனங்கள் முதலான ஐந்து கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

“இன்று வரலாற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு உண்மைக்கு புறம்பானவை சொல்லப் பட்டு வருகின்றன. எனவே தகுந்த ஆதாரங்களுடன் உண்மைகளை வெளிப்படுத்தின் மட்டுமே வித்துவ உலகம் ஏற்றுக்கொள்ளும்” என பேராசிரியர் சி.பத்மநாதன் நிறைவுரையில் உரைத்தார்.

3. நாட்டாரியல் அரங்கு

தலைமை: பேராசிரியர் சி. மௌனகுரு



அவ்வரங்கில் கிழக்கிலங்கை தமிழ் நாட்டார் கதைகள், மட்டக்களப்பு வழிபாட்டு மரபுகள் - பத்ததிகள், ஈழத்து வாய்மொழிப் பாடல்கள் மற்றும் மட்டக்களப்பு தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிலவிய நாட்டார்க் கதைகள் முதலிய நான்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுரையில் பேராசிரியர் சி.மௌனகுரு "நுணுக்கமாக கட்டுரைகளின் அனைத்து ஆய்வுக்கூறுகளையும் உடைத்து அவற்றின் நுண்ணரசியலைப் புரிந்து அதன் அடியாழத்தை நோக்கியமையாக ஆய்வுகள் அமைய வேண்டும்" என்று ஆய்வாளர்களை நெறிப்படுத்தினார்.

4. கலை - அரங்கு
தலைமை : பேராசிரியர் சபா. ஜெயராசா



இவ்வரங்கில் கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரைக்கும் அங்கு நடைபெற்ற நிகழ்வுகள், மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்பட்ட வீதி நாடகங்கள், 1960 களிலிருந்து 2012 வரையான இராவணேசன் வடமோடி நாடகத்தினது ஆடை அணிகலன்கள். ஒப்பனைகள், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலை பீடம் நடாத்திய கலை நிகழ்வுகள், மட்டக் களப்பில் உருவாக்கம் பெற்ற குறுந்திரைப்படங்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை மாணவர்கள் சமர்பித்த பெரும் ஆய்வுக் கட்டுரைகள் (Dissertation) முதலிய ஆய்வுகள் அலசி ஆராயப்பட்டன.


குறித்த ஆய்வுகளை சுவைபட விமர்சித்து பேராசிரியர் நிறைவுரையாற்றினார்.

5. சமூகம் – அரங்கு
தலைமை: பேராசிரியர் செ.யோகராஜா



இவ்வரங்கில் ஆரையம்பதி தமிழ்ச்சமூகம், யாழ்ப்பாணத்தின் தமிழ் வைத்தியத்திற்காக பாடுபட்டோர், கவிஞர் சுபத்திரனின் வாழ்க்கை, கலை, அரசியல் செயற்பாடுகள், தமிழ்பேசும் வேடர்களில் வழிபாட்டு மரபு

6. தமிழ்மொழியும் இலக்கியமும் - அரங்கு
தலைமை : பேராசிரியர் சி.தில்லைநாதன்




இவ்வரங்கில் தமிழில் பதிவாகும் சுவர்க்கவிதைகளும் அவற்றின் ஆவணப்படுத்தலுமென்ற ஆய்வும், மொழி இலக்கியப்பகிர்வுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டிய ஆவணப் படுத்தத்தவறிய ஆரம்பகால ஈழத்து இலக்கியமுயற்சிகள் என்ற ஆய்வும், ஈழத்தில் தோன்றிய சதக இலக்கியங்கள் - ஓர் ஆய்வு என்ற பொருளிலும், பொலநறுவை மாவட்டத் தமிழ்மக்களின் சிறுவர் விளையாட்டுப்பாடல்களும் ஆவணப்படுத்தலும் என்ற ஆய்வும், தமிழில் நூலடைவுகள்: அறிதலும் ஆவணப்படுத்தலும் என்ற ஆய்வும், இலங்கையில் பனையும் பனை தொடர்பான மொழிவழக்குகளும் என்ற பொருளிலும், தமிழில் அச்சேறிய முதல் நூல்களும் அவற்றைக் கண்டுபிடித்த தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியும் என்ற ஆய்வும், வரலாறும் மற்றும் கிழக்கிலங்கை கிறிஸ்தவ இதழ்கள் - தொண்டன், வெட்டாப்பு என்பன குறித்த சிறப்புஆய்வும் போன்ற தலைப்புகளில் எட்டு ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

நிறைவுரையில் பேராசிரியர் சி. தில்லைநாதன் "வழக்கிழந்த சொற்கள் அவற்றின் பொருள் போன்றவை பற்றிய ஆவணமாக தற்போதய காலகட்டத்திற்கு இலங்கை தமிழ் அகராதி ஒன்று தொகுக்கப்பட வேண்டியது அவசியம்" என வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நூலகவியல் அரங்கு

தலைமை: பேராசிரியர் சோ. சந்திரசேகரம்



அங்கு உயர்கல்வித் துறையை சர்வதேச தரத்திற்கு உயர்த்த நூலகத்தகவல் பரிமாற்றத்தின் பங்கு, யாழ்ப்பாண பொதுசன நூலக வரலாறு, நூல்தேட்டம்: மதிப்பீடு, யாழ். பல்கலைக்கழக நூலகத்திலுள்ள கிரந்த வடிவ வடமொழி நூல்களை ஆவணப்படுத்தல் மற்றும் இலங்கை பொது நூலக முறைமை என ஐந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன.

நிறைவுரையில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் "நூலகங்கள் அறிவின் பிறப்பிடமாகவும் சேகரிப்பிடமாகவும் இருக்கும் நிலையில் இவ்வரங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இளம் ஆய்வாளர்களின் பங்களிப்பு மிகுந்த மகிழ்வைத் தருகிறது" என மனமகிழ்ந்தார்.

8. பண்பாடு - அரங்கு

தலைமை: கலாநிதி செல்வி. திருச்சந்திரன்



கிறிஸ்தவ மத வருகையால் இலங்கை தமிழ் மக்கள் வாழ்வின் தாக்கம், ஈழத்தில் திரௌபதி வழிபாட்டின் பரம்பல், யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய உணவு முறைகள் மற்றும் அரசற்ற தேசங்களில் ஆவணப் படுத்தல் முயற்சிகள் இயங்க வேண்டிய வழிமுறைகள் என நான்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப் பட்டது.

"பல்கலைக்கழக ஆய்வுகள் பெரும்பாலும் குறிப்பிட்ட சிந்தனை வட்டத்துக்குள் புள்ளிகள் சார்ந்து இயங்குகின்றன. வெளி ஆய்வுகள் கட்டற்று இயங்க முடிகிறது. இளைஞர்கள் இவ்வாறான மாநாட்டு முயற்சியில் ஈடுபட்டதை மெச்சி பாராட்டுகிறேன்" என நிறைவுரையில் கூறினார்.



"காலமென்னும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும் சாகாது நூலகம் தம் பணி
.வரும் தலைமுறைக்காய் உழைக்குமிந்த அணி"

படவிளக்கம் : இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
ஜே.திவாதரன், ஏ.அனுஹேமன், சி.சேரன், சி.உமாதரன், ரி.கோபிநாத், வி.விமலாதித்தன், ஜி.சுந்தர், ரி.ஹரிஷாந், யோ.கௌரிசங்கர்


நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : கே.சிந்துஜன், எம்.அருள்குமார், எல்.லவன், எஸ்.கஜானி, கே.சிவாலினி, எஸ்.ரமணிகேஸ்வரி, எஸ்.நிசாந்தினி, எஸ்.ஷாலினி, வ.ஜெயனி, எஸ்.வராஹினி, ரி.ஷிவனுஜா, ரி.மதுரிகா, ஆர். நிவேதிகா, க.சுரேஷ்குமார், ஆர்.பிரசாத்

நிற்பவர்கள் பின்வரிசை (இடமிருந்து வலம்) : எஸ்.சுபேசன், எஸ்.சத்தியதேவன். வி.வரலக்ஷ்மன், ஜெ.லடிஸ்லஸ், கே.சரவணன், எஸ்.ஆதிராஜன், எம்.சுதாகர், கே.கிருபாகரன் நதீசன், எஸ்.கௌதமன், வி.சிவரஜன், ரி.நந்தகுமார், எஸ்.பிரகாஷ், எஸ்.அலெக்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARUTHI MONEY EXCHANGE (PVT) LTD.
Authorised Foreign Currency Money Changer
Permit No : ECD/IN/AUT/117
WESTERN UNION
MONEY TRANSFER
அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணய மாற்று முகவர்
315, Galle Road, Colombo 06.
Tel – 011 236 2086 Fax : +9411 236 2288 Mobile : 0772449225, 0714 821 946

GLOBE TRADERS
VAVUNIYA

Dealer for
Hayleys Farm Machineries
and
FOTON Trucks

GLOBE TRADERS
52, Jaffna Road
Vavuniya
Phone : 024 22 26776
077 3068572




S.Premnath

CTS Academy
61, 37th Lane (Peniquick Lane)
Colombo - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பார்வையில் நூலகம்



பொதுவாகவே இளைஞர்கள் பற்றிய சில பார்வை சற்று எதிர்மறையானது. ஆனால் நூலகம் நிறுவனம் கடந்த 9 ஆண்டுகளாக ஆற்றிவரும் எண்ணிமப்பணி இளைஞர்கள் பற்றிய சமூகப் பார்வையை முற்றாக மாற்றியமைத்துள்ளது என்றே சொல்லவேண்டும். புதிய நூற்றாண்டில் சவால்களையும் நிலைமைகளையும் தேவைகளையும் தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் வகையிலான பணிகளை நூலகம் நிறுவனம் செய்து வருவதும் அப்பணியை இளைஞர்கள் பொறுப்பேற்று பெரும் பிரதிபலன்களை எதிர்பாராது, செயற்பட்டு வருவதும் இளைஞர்களுக்கு மிகவும் பெருமை தருவதாகும்.

தமிழ் மக்களை புதிய அறிவுமைய நூற்றாண்டிற்கு யார் எடுத்து செய்வது என்று பார்த்தால் அதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்பதில் நூலகம் நிறுவனம் மக்களுக்கு அறிவிக்கின்றது. இந்த எண்ணிம நூலகத்தில் 13,000 தமிழ் நூல்களையும் சஞ்சிகைகளையும் இதழ்களையும் ஏனைய ஆவணங்களையும் சேகரித்து வைப்பது என்பது ஒரு சாதாரண பணி அல்ல. இத்தகைய எண்ணிமப் பணியினுடைய சிறப்புக்கள் நீண்டகால நன்மைகள் பற்றி இவ்விடத்தில் விபரித்துக் கூறவேண்டியது இல்லை.

அண்மைக்காலங்களில் பல தமிழ் நூலகங்கள் மறைந்து போயுள்ளன. அறிவுத்தேக்கம் ஏற்பட்டு வரும் இக்காலத்தில் அறிவு நூல்களிற்கான பெருவெளியை (Access) இலகுபடுத்த வேண்டிய ஓர் அவசியம் உண்டு. கால இடவர்த்தமானங்களுக்கு (Time Space) அப்பால் அறிவின் இருப்பிடமாக விளங்கும் நூல்களை இலகுவில் பெறுவதற்கான வழியே இந்த நூலகம் நிறுவனம் செய்துள்ளது.

இப்பணி தொடர்ந்து நடைபெறுவதோடு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் சமூகஅறிவியல் சார்ந்த நவீன அறிவை தமிழ்ச் சமூகம் முழுவதும் பரப்புவதற்கு உதவிவரும் இந்த எண்ணிம நூலக நிர்வாகிகளின் பணிகளை அங்கீகரித்து பாராட்டுவதற்கு முழு தமிழ்ச் சமூகமும் முன்வரவேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனர் கருத்து

### இணையத்தில் ஓர் ஈழத்துத் தமிழ் நூலகம் - எனது பார்வையில்



வெள்ளத்தால், வெந்தணலால் அழிக்கமுடியாத ஓர் எண்ணிம ஆவணக் காப்பகம் - எங்கிருந்தும் எல்லோரும் எந்நேரமும் பயன்படுத்தக்கூடிய மாபெரும் அறிவுக் களஞ்சியம். இந்த எண்ணிம ஆவணக் காப்பகம் 2005 தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனால் ஈழத்து எழுத்தாளர்களும் அவர்தம் படைப்புக்களும் உலகளாவிய அளவில் அறிமுகம் பெறுகின்றனர். கிடைத்தற்கரிய ஆவணங்களை உலகின் எந்த இடத்தில் வாழ்வோரும். எந்நேரமும் பெற்றுப் பயன்பெற முடிகிறது. 2012 இல் ஜுன் மாதம் 2, 3, 4 ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில், உலகத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற்ற போது அங்கு பங்காலர்களாகப் பணியாற்றிய எண்ணிம ஆவணக் காப்பகப் பணியாளர்களைச் சந்தித்தேன். அனைவருமே இளைஞரும், இளம்யுவதிகளுமே ஆவர். குறிப்பிட்ட துறையில் ஆழ்ந்த அறிவும், சுறுசுறுப்பும், அர்ப்பன சிந்தனையுடனும் பங்குபற்றியதுடன் நூலகம் பற்றிய பல விபரங்களையும் அனேக அறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும், பெரியோர்களுக்கும் விளக்கமாக எடுத்தியம்பியதுடன் அவர்களது நூல்களையும் நூலகத்திற் பதிவதற்கான அனுமதிகளையும் பெற்றுக் கொண்டார்கள். தமிழை அழியவிடாது காப்பதிலும் உலகைச் சுருக்குவதிலும் அசகாய சூரர்களாக இவர்கள் அங்கே கொடிகட்டிப் பறந்தார்கள் என்பதே உண்மை.

அனேகமான பண்டிதர்களும், புலவர்களும், வித்துவான்களும் தமிழ் இன்னும் 100 வருடங்களில் அழிந்து விடும் அபாயம் உண்டு என பிரான்சின் பரீஸ் நகர மொழி ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளதாக அறிந்து அல்லும்பகலும் ஆழ்ந்த கவலையில் அலைமோதிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இந்த இளைஞர்களின் எண்ணிம நூலகத்தைக் கண்ணுற்றார்களேயானால் உள்ளம் பூரித்து உவகை கொண்டு, உலகுள்ளவரை தமிழ் அழியாது என்ற உண்மையை உணர்வார்கள்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாரதி விடுத்த அறைகூவலை செயல் வடிவாக்கி கன்னித்தமிழைத் தரங்கெடாது, உலகுள்ளவரை திக்குத்திசையெல்லாம் எடுத்துச்சென்று தமிழை அழியாது காத்த பெருமை எண்ணிம நூலகத்திற்கே உண்டு என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் நான் உள்ளம் பூரித்துப் போனேன்.

**வயலற் சரோஜா (கலாபூஷணம்)**
B.Com.Dip.in.Ed.M.Com (Hon)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் கலாசார நிகழ்வும்

இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்களின் மரபறிவுச்செல்வங்களை ஆவணப்படுத்தல் பேணிப்பாதுகாத்தல் மூலமாக, தற்போதைய, எதிர்கால தலைமுறையினருக்கான அறிவுப் பகிர்வுப் பணியை செவ்வனே செய்து வருகின்ற நூலகம் நிறுவனம், 2014 ஆம் ஆண்டில் தனது ஒன்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கலாசார நிகழ்வுகளுடன் கூடியதாகத் தனது ஆண்டு விழாவை வரும் ஜனவரி 4 ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பிற்பகல் நான்கு மணியளவில் ஒழுங்கு செய்துள்ளது.




ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்களின் ஆவணங்களை எண்ணிமப்படுத்தி பாதுகாக்கும் தார்மீக கடப்பாட்டை கொண்ட நூலகம் நிறுவனம் இதுவரை காலமும் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தலிலேயே அதிக கவனம் கொண்டிருந்தது. எனினும் எமது பாரம்பரிய கலை கலாசாரங்களை ஆவணப்படுத்த வேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. எமது பாரம்பரிய கலைகளின் ஆற்றுகைகள் தற்போது மருவி வருகின்றது. மக்களிடையே இவ்வாறான செயற்பாடுகளுக்கான ஆதரவும் குறைந்து வருகின்றது. எனவே நாம் எம் கலைகளை ஆவணப்படுத்தி அவற்றைப் பாதுகாப்பதோடு நில்லாமல் அவற்றை உரிய முறையில் எமது மக்களிடம் கொண்டு சேர்த்து, அவர்களை எம் கலைகளின்பால் ஈர்த்து அவை அழிந்து போகாமல் மென்மேலும் வளர ஆதரவு அழிக்கும் செயல்பாட்டையும் நூலகம் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இதன் முதல் அங்கமாக, மட்டக்களப்பு பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இராவணேசன் கூத்தும் அவுஸ்திரேலியா வாழ் இலங்கை தமிழ் பேசும் மாணவிகளால் அரங்கேற்றப்படவுள்ள பரதநாட்டிய நிகழ்வொன்றுமாக முதலாவது இணைந்த கலாசார நிகழ்வை ஒன்பதாமாண்டு விழாவுடன் கூடியதாக ஒழுங்கு செய்துள்ளது. மேலும் அன்று பள்ளிக்கூடம் செயற்றிட்டத்தின் வலைத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்யும் வைபவமும், 'தமிழ் ஆவண மாநாடு 2013 - ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு' எனும் ஆய்வுமலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் பற்றிய எனது கருத்து



நூலகம் இணையத்தளமானது பல்வேறு மட்டங்களில் வெளியிடப்படும் எழுத்தாளர்களின் படைப்புக்களை அதாவது கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள், நாவல்கள், சிறுவர் படைப்புக்கள் போன்றவற்றை உலகறியச் செய்வதில் முன்னணியாகத் திகழ்கின்றது. தேடற்கரிய பல நூல்களையும் வாசிக்கக் கூடிய வாய்ப்பை இந்த நூலகம் இணையத்தளமானது வாசகர்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ளமை ஒரு வரப்பிரசாதமாகும்.

அது மாத்திரமின்றி புதிய நூலகம் என்ற இதழையும் வெளியிட்டு வருவதும் பாராட்டுக்குரியது. நூல்களை இவ்வாறு ஆவணப்படுத்தி வைப்பதானது உலகளாவிய ரீதியில் வாழ்கின்ற தமிழ் பேசும் இலக்கிய உள்ளங்களை வெகுவாகக் கவரும் என்பதில் ஐயமில்லை. ஈழத்து இதழ்களை ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இதழகம் என்ற ஒரு சிறு நூலை பிரசுரித்து சஞ்சிகைகளின் பெயர்கள், பிரதம ஆசிரியர், முகவரி ஆகியற்றை அறியச் செய்து சஞ்சிகைகளையும் அறிமுகம் செய்து வரும் பணி மகத்தானது.

**வெலிகம ரிம்ஸா மொஹம்மத்**
பிரதம ஆசிரியர்
பூங்காவனம் சஞ்சிகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் அரங்க ஆய்வு கூடம்


சி.மௌனகுரு

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமை ஆற்றிய நான் 2009 மார்ச் மாதத்துடன் ஓய்வு பெற்றுவிட்டேன். ஓய்வு பெற்று இரண்டு வருடங்களின் பின் அரங்க ஆய்வு கூடத்தைத் தொடங்கினேன். இதில் கிடைக்கும் மனமகிழ்ச்சியும் மனநிறைவும் வேறு எந்த ஒரு முயற்சியில் கோடி கொடுத்தாலும் கிடைக்காது.



பல்கலைக்கழகத்தில் மாணவர்கட்குத் திறன்கள் (ஆட, பாட, எழுத) கற்பிக்கப்படுகிறதேயொழிய ஆக்க சக்தியை வளர்ப்பதற்கான வாய்ப்புக்கள் கொடுக்கப்படுவதில்லை. அடக்குமுறைச் சமுதாயம் போல காட்சி அளிக்கும் நிறுவனத்துக்குள்ளிருந்து சுதந்திர சிந்தனையாளர்கள் தோன்றுவது என்பது சவாலான விடயமே. பல்கலைக்கழகத்தில் படிப்பித்துக் கொண்டிருந்த காலத்திலும் என் சிந்தனைகள் பலவற்றைச் செயற்படுத்தக் கடினமான நிலை இருந்தது. அதன் அதிகார அடுக்கு அப்படி. பலருக்குப் பதில் சொல்ல வேண்டும். கலை பற்றி அறியாதோர், உயர் பதவியிலிருந்து கொண்டு கலை பற்றி அபிப்பிராயம் சொல்வதைச் சகிக்க வேண்டும்.

இதைவிட பல்கலைக்கழகத்துள் குழுவாதம், சுயநலம் என்பனவும் அதிகம். இவற்றினின்று விடுபட்டுச் சுதந்திரமாக நான் அமைத்த நிறுவனமே அரங்க ஆய்வு கூடம். இங்கு 32 பேர், என்னோடு பணியாற்றுகிறார்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைகழக மாணவர், பாடசாலை மாணவர், உத்தியோகத்தர் எனப் பல தரத்தினர். அவர்களை நான் மாணாக்கர்கள் என அழைக்காது சக பயணிகள் என்றே அழைக்கிறேன்.



ஒவ்வொரு ஞாயிறும் தவறாது காலை 8.30 மணி தொடக்கம் யோகாவுடன் ஆரம்பிக்கும் செயற்பாடுகள் மாலை 5.30 மணி வரை நீடிக்கும். ஒன்று கூடிப் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபடுகிறோம். உடல் உள பயிற்சிகள், கற்பனை செய்யப்பயிற்சி போன்றன அளிக்கப்படுகின்றன. எனது சக ஊழியர் பிறநாட்டு நாடகங்கள், கலைகள், உள்நாட்டுக் கலைகள் என்பனவற்றிற்கு மல்ரிமீடியா, மூலம் பரிச்சயமாகிறார்கள். நாடகம் சம்பந்தமான நடிப்பு, பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகளினூடாக புத்தாக்கம் செய்ய கண்டுபிடிப்பு செய்ய இங்குள்ளோர் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். சிலசமயங்களில் பாடசாலை மாணாக்கருக்கும் அரங்க ஆய்வுகூடம் பயிற்சி அளிக்கிறது.

ஆக்கத்திறனும் அறிவும் மிகுந்தோரை உருவாக்கும் நிறுவனம் இது. இங்கு பாடத்திட்டம் இல்லை. ஆய்வுகூடத்தில் பாடத்திட்டம் ஏன்? ஆய்வு தான் முக்கியம். பல மூலகங்களையும் இணைத்து விஞ்ஞான பரிசோதனை கூடத்தில் புதியன கண்டு பிடிப்பது போல பல விடயங்களை (நடிப்பு, இசை, நாடக வடிவம்) கலந்து புதிய அவைக் காற்றுகைகளைக் கண்டு பிடிக்க அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இவ்வாய்வு கூடம் தொடங்கிமூன்றுவருடங்கள் ஆகி விட்டன. கூத்தும் பரதமும் என்ற கண்டுபிடிப்பு இதனூடாச் செய்யப்பட்டு பலத்த வரவேற்பையும் கூடவே எதிர்ப்பையும் பெற்றது. ஆய்வுகூடத்தில் வெற்றிதான் கிட்டுமென்பதில்லை. தோல்விகளும் கிட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதந்திரமாகப் படைக்கும் ஒரு வெளியை நாம் இங்கு வருவோருக்கு அளிக்கிறோம். அவர்களும் சுதந்திரமாகச் செயற்படுகிறார்கள். தமக்குள் இத்தனை ஆற்றல்கள் இருந்தனவா என அவர்களே ஆச்சரியப்படுகிறார்கள். தங்களைத் தாங்களே கண்டு பிடிக்கிறார்கள். இதற்கென ஒரு கட்டிடம் எடுத்துள்ளோம். இதற்கான ஓர் சிறிய நூல் நிலையமுமுண்டு. அந்த வளாகத்துக்குள் வந்ததும் கட்டுப்பாடற்ற ஒரு சுதந்திர உலகுக்குள் தாங்கள் வந்து விட்டதை உணர்வதாக அரங்க ஆய்வுகூடச் சக பயணிகள் கூறுகின்றனர்.

**இங்கு உயர்வு தாழ்வு இல்லை. சிறிது பெரிது இல்லை.**
**சமத்துவமே நிலவுகிறது.**
**சமத்துவ மனநிலையில் தான் கற்பனை பீறிட்டுப் பாயும்.**



நான் கடந்த 50 வருடங்களாகக் கற்றுக் கொண்டவற்றை, பழகிக் கொண்டவற்றை, என் அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எனது புதிய சிந்தனைகளை அவர்களோடு உரசிப்பார்க்கிறேன். புதிதாக நானும் படைக்கிறேன். மகிழ்ச்சியாகப் பொழுது கழிகிறது. ஆய்வை விடப் படைப்பு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. இங்கு எல்லாமே இலவசம். என் முதலீட்டில் தான் இதனை நடத்துகிறேன். எனது உறவினர்கள் சில உதவிகள் புரிகின்றனர். அவர்கள் என் போக்கை அறிந்தவர்கள். இதனால் எனக்கு கிடைக்கும் பெரும் இலாபம் நான் அடையும் மனமகிழ்ச்சி தான். இம்மனநிறைவு என்பது கோடி கொடுத்தாலும் கிடைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இராவணேசன் வடமோடி நாடகம்



பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் முதுநிலை விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறுப்புத் துணைவேந்தராகவும், அதன்பின் கலைப்புலத் தலைவராகவும் தொடர்ந்து பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களிற்கெல்லாம் பயணம் செய்து, அவர்களுள் ஒருவராக வாழ்ந்து, அருகி வந்த அப்பிரதேச கூத்துக்களை மீண்டும் ஆடும்படி கிராம மக்களிற்கும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிற்கும் உற்சாகமளித்ததுடன், முறையான பயிற்சியுமளித்து அக்கலைகளிற்கு கற்றோர் மட்டத்திலும், அரச மட்டத்திலும் ஆதரவு பெற்று தந்தவர் பழைய கூத்து ஏடுகளை புதுப்பித்தவர் பதிப்பித்தவர் பிரதேச மட்டத்தில் அறியப்பட்ட வடமோடி நாடகக் கலையை தேசிய, சர்வதேச மட்டத்தில் அறிமுகம் செய்தவர் தமிழரின் நாடக மூலவேர்களைத் தமிழர்க்கு உணர்த்தியவர்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே' என்ற தத்துவப்படி, சகல கலைகளும் மாற்றமடைந்துவரும் காலமாற்றத்துக் கேற்ப நமது வடமோடி நாடகத்தையும் புதுமைப்படுத்தினார். மேலைத் தேச, கீழைத்தேச வாத்தியங்களைப் பயன்படுத்தி, காட்சி மாற்றங்களையும் ஏற்படுத்தி, கூத்தும் நாடகமும் தந்த ஒரு புதுக்கலையாக நமது வடமோடி நாடகத்தை கவர்ச்சிப்படுத்தினார். இதன்படியிவர் அமைத்த 'இராவணேசன்' எனும் கலைவடிவத்தில், இராவணன் துன்பியல் நாயகனாக சித்தரிக்கப்பட்டுள்ளான். தான் செய்த பிழைகளினால் தன் வீழ்ச்சியைத் தானே சந்திக்கின்ற நல்லவனே துன்பியல் நாயகன். "அழிவது உறுதி என்று அறிந்துமே இராவணேசன், இறுதி மூச்சிருக்கு மட்டும் உறுதியை விட்டானில்லை" என்ற பாடல் வரிகள் புலப்படுத்தும்.

வீரத்திற்காகவே வாழ்ந்து, வீழ்ந்த வீரனின் வரலாற்றை யுத்த காண்டத்தை மையமாக வைத்து உருவாக்கப்பெற்ற 'இராவணேசன்', சகல இன மொழி மக்களாலும், கற்றோராலும், ஆய்வாளர்களாலும் பெரும் பாராட்டைப் பெற்றது.



வடமோடி நாடகம், நாடக வரலாற்றில் சாதனை படைத்தது, சாகாவரம் பெற்றது. இச்சிறந்த வடமோடி நாடகத்தை, மிகச்சிறந்த பல்கலை வித்தகர் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் நெறியாள்கையுடன், இந்நாடகம் முதன்முறையாக ஆரம்பித்ததிலிருந்து தற்போது ஐந்தாவது தலைமுறைக் கலைஞர்களின் பங்களிப்புடன் வழங்குவதில் நூலகம் நிறுவனம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதவுகளும், கட்டடங்களும், ஜன்னல்களும் இல்லாத, புயல், மழை, காற்று, சூறாவளி என பாதிக்கப்படாத காலத்தை வென்று கடந்த எட்டாண்டுகளுக்கு மேலாக வெற்றி நடைபோட்டு ஒன்பதாம் ஆண்டில் தன் பயணத்தை தொடரும் நூலக நிறுவனம் ஒரு நாட்டின் அரசு செய்ய வேண்டிய பணியை, ஒரு பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றலும் ஆளுமை மிக்க சிலர் தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால வரலாற்றுப் பதிவுகளை பதிவு செய்து பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நூலகம் நிறுவனம் என்ற அமைப்பை உருவாக்கி, எண்ணிம நூலக வலைத்தளத்தில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளான இலங்கையில் வெளிவந்த சிற்றிதழ்களை, பத்திரிகைகளை இணைய வலைத்தளத்தின் மூலம் பார்க்கவும் படிக்கவும் வழியமைத்துள்ளது.

இலங்கையின் பெறுமதி வாய்ந்த தமிழ் மக்களின் கண்கள் போன்ற யாழ்ப்பாண நூலகம் எரியூட்டி அழிக்கப்பட்டது. இதுவே இந்த நூலகம் நிறுவன இளைஞர்களின் அறிவுத்தேடலுக்கு வழி காட்டியது. அழிக்க முடியாத ஒரு நூலகத்தை உருவாக்க வேண்டும் என்கிற சிந்தனை, இதனை செயல்படுத்த வேண்டும் என்கிற ஆர்வம் அதன் விளைவு தான் நூலக நிறுவனம். நூலகம் என்பது கதவுகளைக் கொண்ட கட்டிடத்தில் அமைந்திருக்கும், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தான் நூலகத்தை பயன்படுத்த முடியும். ஆனால் நூலக நிறுவனத்தில் எண்ணிம நூலகத்தை வீட்டிலிருந்தவாறு, அலுவலகத்தில் கணனியின் முன் அமர்ந்தவாறு நூலகத்தைப் பயன்படுத்த முடியும். இலங்கைத் தமிழில் வெளிவரும் என்ற கொள்கையுடன் பதிவு செய்து வருகின்றது. நம் நாட்டில் மட்டும் தமிழ் பேசும் மனிதர்கள் எங்கிருந்தாலும் இந்த எண்ணிம நூலகத்தை எந்த நேரத்திலும் பயன்படுத்த முடியும். தேவையான தகவல்களை தேடிப் பெறமுடியும்.

இந்த நூலகம் இன்று ஆய்வாளர்களுக்கு ஓர் அமுதசுரபி, தேடுதல் மிகுந்த ஆய்வாளர்களுக்கு, ஆய்வு மாணவர்களுக்கு பல்வகை பயன்களை தொடர்ந்து அளித்து வருகின்றது. உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மறுமலர்ச்சி என்ற சஞ்சிகை காத்திரமான பங்களிப்பை செய்துள்ளது. அது மாத்திரமல்ல 400 இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகளை நூலக வலைத்தளத்தில் இதழகம் பிரிவில் பார்க்க முடியும். இது போன்ற பயனுள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நூலகம் நிறுவனம் வளரும் உயிர் துடிப்பு மிக்க அமைப்பு காலத்தை வென்று தன் கடமைகளைச் செய்து வருகிறது. இந்த நூலகப் பணிகளுக்கு நாம் என்ன செய்தோம் என எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் எழுதி வெளியிடும் நூல்களை, சஞ்சிகைகளை கொடுத்து உதவ வேண்டும். நாளைய தலைமுறையின் அரிய பொக்கிஷமாகும் இந்த நூலகத்தின் வளர்ச்சியில் நாமும் அக்கறை காட்ட வேண்டும்.

**அந்தனி ஜீவா**
இதழாசிரியர்
'கொழுந்து' சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Nrithakshetra School of Indian Classical Dance*

*- Shanthy Rajendran*



Shanthy Rajendran, one of Australia's most distinguished veterans of Bharatha Natyam was trained at Kalakshetra , under the direct tutelage of Smt Rukmini devi.

A far-reaching vision to carry on the Kalakshetra tradition outside of India followed Shanthy's return to Sri Lanka in 1974 where she established the "Nrithakshetra School" that would relocate to Melbourne in 1980 and prosper over the next 33 years to become one of Australia's best dance schools. The school's success is rooted in its strict adherence to the Kalakshetra tradition and the intrinsic grace, which Shanthy instills in all her students; a signature of her own dance style.

Shanthy's drive and passion for this dance form in Australia brought about the introduction of live orchestras, using local artists, in dance performances for the first time. These efforts were lauded by the Australian Indian arts community at large and soon after her precedent live orchestras became a standard feature of any dance performance down under. Shanthy's contribution to the arts in Australia was formally recognised in 2007 when she became a recipient of the Victorian Premier's Multicultural award for Excellence.

With generations of Australian dancers undergoing the finest education in dance the southern hemisphere has to offer, and with 59 graduates to boast of, Shanthy takes pride in also training her senior students in nattuvangam, cholkettu, and also encourages them to dabble in choreography. Shanthy promotes an active involvement from her students, specifically encouraging her senior students to take on leadership roles, and mentor their younger peers.


The school is a regular contributor to the Australian calendar of dance events, including annual school performances and charity shows. The school has also presented six major productions to much public acclaim; Jagath Janani (1994), Natya Malai (1998), Droupadi Sabatham (1999/2000), Sai Baba-History (2000), and Kannapar Kuravanji (2003) which toured Australia nationally. In 2009 Shanthy embarked on a venture to unite the Indian classical dance community in Melbourne to establish "Salangai in Sangamam" (dance bells in unison) in which post-arangetram students across the city are invited to perform annually in a collaborative effort.

The school's most recent feat has seen the international debut of "Then Thuruva Salangai". In early 2013 Shanthy's most senior students were invited to the UK to present a full repertoire; including a soul-stirring mini ballet showcasing the story of the epic Ramayanam. The acclaim from the UK has seen the school's reputation extend to global audiences.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருதக்ஷேத்ராவின் தென்துருவ சலங்கை



பரதத்தை நேசிப்பவர்கள் பலர், ஆனால் அவ்வுன்னதக் கலையின் வாழ்வுக்காக, வளர்சிக்காக சுவாசிப்பவர்கள் ஒரு சிலரே! அத்தகையவர்களுள் ஒருவர், அவுஸ்திரேலிய நிருதக்ஷேத்ரா நாட்டிய பள்ளியின் ஸ்தாபகரும், ஆசிரியையுமான சாந்தி ராஜேந்திரன் அவர்கள். இவர் புகழ் பெற்ற 'கலாஷேத்ரா' நாட்டியப்பள்ளியில், கலைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த ருக்மணி தேவி அம்மையாரை தன் குருவாகக்கொண்டு, அவர்களிடம் முறைப்படி பரதநாட்டியத்தை கற்றமை, இவருடைய பரத மேதமைக்கு முக்கிய காரணமாகும். காலத்தின் கோலத்தால் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து சென்றாலும், புலம்பெயராத கலை மனதுக்குச் சொந்தக்காரர்.

புலம்பெயர்ந்த எம் ஈழத்து உறவுகள் மத்தியில் கலை கலாசார மரபுகளை அழிந்து விடாத வண்ணம் கலைநிகழ்ச்சிகளை நடாத்தியும், எதிர்கால சந்ததியினர்க்கு பயிற்றுவித்தும் வருகின்றார். இவர் தம் நிருதக்ஷேத்ரா நாட்டிய பள்ளியின் மாணாக்கருடன் இணைந்து, தான் வசிக்கும் நாட்டில் மட்டுமல்லாது புலம்பெயர்ந்த எம் மக்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் சென்று தமது அரங்கேற்றங்களை அழகுற செய்து வருவதால் ஏனைய நாடுகளிலும் எமது கலைகளின் இருப்பை உறுதி செய்கின்றார்கள் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் தங்கள் நாடுகளிலும் தாங்கள் தங்கள் மரபுகளை பேணவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகிறர்கள் அதற்கான சந்தர்பத்தையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள். இதற்கு இவ்வாண்டின் ஆரம்பத்தில் நிருதக்ஷேத்ரா நாட்டிய பள்ளியின் சிரேஷ்ட மாணவர்கள் ஐக்கிய இராஜ்ஜியத்தில் நடாத்திய நடன நிகழ்சிக்கு, உலகெங்கணுமிருந்து கிடைத்த ஏகோபித்த வரவேற்பே தக்க சான்று. இதுவரை ஐம்பத்தியொன்பது ஆடற்செல்விகளை 'பரத நாட்டிய அரங்கேற்றம்' காண வழிசமைத்ததுடன் பரதத்தின் உயர்ச்சிக்காய் பல்வேறு வழிகளில் உறுதியுடன் உழைத்தமைக்காக, அவுஸ்திரேலிய அரசின் உயரிய விருதான 'விக்டோரியன் முதன் மந்திரிப் பல்கலை விருதை' வென்றவர்.



இவருடைய அண்மைய சாதனையாக தம் மாணவிகளுடன் 'தென் துருவ சலங்கை' எனும் நடன நிகழ்வை உலகின் பல நாடுகளிலும் ஆற்றிவருகின்றார். இராமாயண ஸ்ரீ ராமனையே பாட்டுடை நாயகனாக் கொண்டு இந்நடனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் கடந்த வாரம், கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்ற அவர்களது நடனநிகழ்வைக் கண்ணுற்ற இலங்கையின் புகழ் பூத்த நடனவித்தகர்கள் உளமார பாராட்டினர்.

'பரதக் கலைப் பாரம்பரியத்தின் இன்றைய இளம் வாரிசுகளாக, நல்ல பல ஆடல் நிகழ்ச்சிகளை லட்சிய ஞானத்துடனும், லட்சணப் பொலிவுடனும் நடத்தும் திறமைசாலியாக, நாட்டியக் கலையின் நந்தமிழ்ச் செல்வமாக நிருதக்ஷேத்ரா நாட்டிய பள்ளியின் மாணவிகள் விளங்குகின்றனர். நாட்டியம் ஆடவேண்டும் என்ற விருப்பம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் லயஞானமுள்ள எல்லோருக்கும்தான் இருக்கும். ஆனால், நுட்பமறிந்து, சாஸ்திரத்தின் நுணுக்கங்களை அறிந்து ஒவ்வோர் அசைவிலும், ஒவ்வோர் அபிநயத்திலும், அடைவிலும், முத்திரையிலும், தீர்மானத்திலும் ஒவ்வொரு தனித்தன்மை பெற்ற மென்மைகளை இயற்கையாகப் பெற்றிருக்கும் நாட்டியச் செல்விகள் மிகச் சிலர்தான் இருக்கிறார்கள். அந்த மிகச்சிறந்த ஆடற் செல்விகளில் நிருதக்ஷேத்ரா நாட்டிய பள்ளியின் மாணவிகள் இன்று நல்லதோர் இடத்தைப் பெற்றுள்ளனர், என அன்று அந்நிகழ்விற்கு வருகை தந்திருந்த பலரும் பாராட்டுப் பத்திரம் வாசித்தமை, அவ்வாடற் செல்விகளின் திறமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. அந்த வகையில், இலங்கையில் நிருதக்ஷேத்ராவின் 'தென் துருவ சலங்கை' நடன நிகழ்வை, தனது ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாமேடையில் முன்னின்று நடாத்துவதில் நூலக நிறுவனம் பூரிப்படைகின்றது.




*Best Wishes*

FOR SUCESS IN THE FUTURE ENDAUORS OF
"NOOLOHAM FOUNDATION"

Dr.S.UDAYAKUMAR JP
WELLAWATTE



*Best Wishes*

FROM

**K.KITUBANANTHAKIRUSHNAN**

KUPPILAN SOUTH
EARLALAI
JAFFNA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூரல்



நூலக திட்டத்தின் தொடக்க உறுப்பினர்களுள் ஒருவரும் நூலகம் நிறுவனத்தின் முக்கிய பங்களிப்பாளருமான

## புவனேந்திரன் ஈழநாதன் (30-09-2012)

மிகச் சிறிய அளவில் இருந்த நூலகத் திட்டத்துக்கு வளங்களைத் திரட்டியும் பெருமளவு பங்களிப்பாளரை இணைத்தும் அதன் செயற்பாடுகளைச் சாத்தியமாக்கியவர் ஈழநாதன். குறிப்பாக நூலகத்திற்கான முதலாவது வழங்கி, முதல் நிதிப் பங்களிப்பு போன்றவற்றை வழங்கியது இவர்தான்.

இவ்வொன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் அவரை நினைவு கூறும் நூலகம் நிறுவனம், அவருடைய விருப்பங்களையும் கனவுகளையும் நிறைவேற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org